Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 83

National Tamil Daily தேசிய தினசரி

(5 5-65)

விசுவாவசு சித்திரை 23 முஹர்ரம் பிறை 3 புதன்கிழமை

## இலவு காத்த கிளியா?

### ஆஸ்பத்திரியில் கர்ப்பிணிகள்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியின் பிரசவ சிகிச்சைப் பிரிவில் செவ்வாய்க்கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே கர்ப்பிணிகள் பார்வையிடப்படுகின்றனர். இந்நாட்களில் தலா 50 பேருக்குமேல் டிக்கட் வழங்கப்படுவதில்லை இதற்காக சிலர் இரவோடு இரவாகவும் வந்து ஆஸ்பத்திரி வாயிலில் காத்துக் கவம் கிடக்க வேண்டியிருக்கிறது. அப்படிக் கிடந்தும் சில கர்ப்பிணிகள் சிகிச்சை பெறாது வீடு செல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படுகின்றது

குறிப்பிட்ட இந்த நாட்களில் சுமார் 150 கர்ப்பிணிகள் சிகிச்சைக்காக வருகின்றனர் ஆனால் 50 பேர்கள் மட்டும்தான் டாக்டர்களால் பார்வையிடப்படுகின்றனர். இது சாதாரண வழக்கம் ஆனால் இன்று காலை ஆஸ்பத்திரிக் கதவு வழக்கத்திற்கு மாறாக ஆறு மணிக்கே திறக்கப்பட்டது. மறுநாட்களிலெல்லாம் கதவு காலை ஏழு மணிக்கே திறக்கப்படுவதுண்டு. இந்த திடீர்மாற்றங்களினால் கர்ப்பிணிகள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாக வேண்டியிருக்கின்றது.

மறுநாட்கள்போல் இன்றும் 50 கர்ப்பிணிகளுக்கு டிக்கட்டுகள் வழங்கப்பட்

(6-ம் பக்கம் பார்க்க)

## “பாகிஸ்தான் உரிமைகோரிக்கை நியாயமற்றது, பொய்யானது”

### பாதுகாப்பு சபைக்கு இந்தியா கடிதம்

நியுயோர்க், மே 4

கட்சிலுள்ள ரன்பகுதியில் பாதிக்கு மேற்பட்ட பகுதிகளுக்குச் சொந்தமென பாகிஸ்தான் உரிமை கோருவதில் நியாயம் கிடையாது பொய்யானது என ஐ.நா.விலுள்ள இந்தியப் பிரதிநிதி திரு. பி. என். சக்கரவர்த்தி பாதுகாப்புச்சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

1908, 1909-ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கிலப்படம் சிந்து மாகாணத்திற்கும், கட்சிக்குமிடையேயான எல்லைகளை தெளிவாகக் காட்டுகிறது என அவர் தன் கடிதத்தில் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தான் பிரதிநிதி கடந்த 19-ந் திகதி பாதுகாப்புச்சபைத் தலைவருக்கு எழுதிய கடிதத்திற்கு பதிலளிக்குமுகமாக இக்கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானின் தற்போதைய நடவடிக்கை அந்த நாட்டின் ஆக்கிரமிப்பு நோக்கத்தையே காட்டுகிறது என கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருக்கிறது

இதற்கிடையில் கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் துருப்புக்களை குவித்து வருவது குறித்து இந்தியா கவனமாக பரிசீலித்து வருகிறது என பாதுகாப்பு மந்திரி திரு. சாவான் கூறினார்.

---

புதுடில்லி, மே. 4

வருகிற 8-ந் திகதி புறப்படும் முதல் கப்பலில் தாம் இந்தியா திரும்புவதாக திரு. ஷேக் அப்துல்லா தெரிவித்திருக்கிறார் என லோகசபையில் ராஜாங்க உதவி மந்திரி ஸ்ரீமதி லக்ஷ்மிமேனன் அறிவித்தார்.

## வடபகுதியின் பிரச்னைகள் ஆராயப்பட்டன

## உள்நாட்டு அமைச்சர் கூட்டிய மகாநாடு

கொழும்பு செவ்வாய்

வடபகுதியின் பிரச்னைகள் பற்றி உள்நாட்டு மந்திரி டாக்டர் தகநாயக்கா இன்று கூட்டிய மகாநாட்டில் பரிசீலனை செய்யப்பட்டது. இம்மகாநாட்டில் வடபகுதியைச் சேர்ந்த பல எம் பி க்கள் கலந்து கொண்டனர்,

வடபகுதியிலுள்ள விவசாய, தொழில்வாய்ப்பு, சுகாதார, வீடமைப்பு, கல்வி சம்பந்தப்பட்ட பிரச்னைகள் உட்படப் பல பிரச்னைகளை எம் பிக்கள் மந்திரியிடம் எடுத்துக்கூறினதாகவும், இவற்றை நிவிர்த்திப்பதற்கான ஆலோசனைகளைத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது

குடியிருக்காத வளவுகளுக்குள்ளிருக்கும் பனைகளிலிருந்து கருப்பநீர் சேர்க்கக்கூடாது என்ற சட்டத்தினால் சீவல் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் அத்துடன் பொருளாதார அபிவிருத்திக்கு ஊக்கம் விளைவிப்பதாகவும் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது

மகாநாட்டில் செய்யப்பட்ட முடிவு எதுவும் உத்தியோக பூர்வமாக தெரிவிக்கப்படவில்லையாகிலும்மகாநாடு சுமார் 2 மணித்தியாலங்கள் நடைபெற்றதாக அறியப்படுகிறது

---

### மந்திரிகளின் விஜயம்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

வடமத்திய மாகாணத்தையும் பதவியாவையும் மேமாதம் 16-ந் திகதி மூன்று மந்திரிமார்கள் நேரில் சென்று உத்தியோகபூர்வமான முறையில் பார்வையிடுவார்கள். வரட்சியின் காரணமாகவும் அங்குள்ள மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறியவும் எவ்வாறு நிவாரணம் அளிக்கப்படவேண்டும் என்பதற்காகவுமே மந்திரிமார்கள் அங்கு செல்கிறார்கள்.

---

### ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்.

குரும்பசிட்டி சித்தி விநாயகர் கோவிலில் மகோற்சவம் மே 6-ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி மே 14-ம் திகதி இரதோற்சவத்துடன் முடிவடையும். மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

கூ. மொ. வி.

## ஊழல்களை விசாரிக்க கமிஷன் நியமிக்கப்படும்

### கமிஷனர்களின் பெயர்களை மந்திரி சிபார்சு செய்துள்ளார்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் நிர்வாகத்தையும் அதன் கடந்தகால ஊழல்களையும் விசாரிக்க ஒரு விசாரணைச்சபை அமைக்கப்பட வேண்டுமென்று பலகாலமாக பொதுமக்களும் பத்திரிகைகளும் எழுப்பிய பிரச்னைக்கு முடிவுகாணும்வகையில் வர்த்தகமந்திரி, கூ. மொ வி ஸ்தாபனத்தை விசாரணைசெய்யத் திருவாளர்கள் ஏச் டபிள்யு ஆர் வீரசூரியா, கே சச்சிதானந்தா, டி எல் பெயர்லே, பிட்றிஸ் முதலியோருடைய பெயர்களைத் தேசாதிபதிக்கு சிபார்சு செய்துள்ளார்.

திரு வீரசூரியா முன்னாள் நீதியரசராவர், அவர் முடிக்குரிய நியாயவாதியாக 1936ம் ஆண்டு நியமிக்கப்பட்டுப் பின்னர் நீதியரசராகக் கடமையாற்றி கடந்த ஆண்டில் ஓய்வு பெற்றார். திரு சச்சிதானந்தா ஒரு சிறந்த கணக்காளர் ஸ்தாபனத்தின் பங்காளரும் கணக்காளருமாவர். திரு பிட்றிஸ் மெலேர்ஸ வில்லியம் பிட்றிஸ் கம்பெனியின் நிர்வாகியாவர்.

விசாரணை அடுத்த வாரம் தொடக்கம் இயங்குமெனத் தெரியவருகிறது.

புலோலியில்

## பாடசாலைமாணவர்கள் வேலைநிறுத்தம்

உடுப்பிட்டி, செவ்.

புலோலி இந்து ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையில் இரண்டாம் தவணை ஆரம்பித்தன்று பாடசாலை அதிபரின் குறிப்பிட்ட ஒரு நடவடிக்கையை எதிர்க்கும் முகமாக 200-க்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலையைவிட்டு வெளிநடப்புச் செய்து வாசலில் நின்றுகொண்டு ஆரவாரம் செய்தனர் அச்சமயம் ஊர்ப் பிரமுகர்கள் சிலர் மாணவர்களை ஒழுங்கான முறையில் தங்கள் போராட்டத்தை நடாத்திக்கொள்ளுமாறு வேண்டிக் கொண்டதற்கிணங்க மாணவர்கள் சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாடசாலை அதிபருக்குத் தங்கள் குறைகளையும் தீர்மானங்களையும்எழுதி ஓர் மகஜரென்று கொடுத்தார்கள். இம் மகஜரின் பிரதிகள் உதவி வித்தியாதிபதிக்கும் பருத்தித்துறை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதிபரின் சாதகமான பதில் கிடைக்கும்வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறுமெனத் தெரிகிறது.

### “தீவிர கவனம் செலுத்தவேண்டும்”

சாவகச்சேரி, செவ்வாய்

“தீண்டாமை ஒழிப்பு முயற்சியில் நமது தமிழ்த் தலைவர்கள் தீவிர கவனம் செலுத்தாவிட்டால் இவ்வருட இறுதியில் எமது இளைஞர்கள் ஒரு மனித உரிமைப் போராட்டத்தை ஆரம்பிப்பார்கள்” என்று தென்மராட்சி மக்கள் முன்னேற்ற மன்ற செயலாளர் திரு. க. நடராசா எழுதுமட்டுவாள் மக்கள் முன்னேற்ற மன்றத்தின் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்தை எழுதுமட்டுவாளில் தபால் கந்தோர் ஒன்று நிறுவித்தருமாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## முதல் எதிரி விடுதலை

## 2-ம் எதிரிக்கு 7 வருடச்சிறை

### பருத்தித்துறை கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை கொலை வழக்கு நேற்றுக்காலை இரண்டாவது தினமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின் நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் முதலாம் எதிரியை விடுதலை செய்து இரண்டாம் எதிரிக்கு ஏழுவருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத்தீர்ப்பளித்தார்.

முதலாம் எதிரி எக்குற்றச்சாட்டுகளுக்கும் குற்றவாளியல்லவென்றும், இரண்டாம் எதிரி கொலைக்குற்றமாகாத கைமோசக் கொலைக் குற்றத்திற்கு குற்றவாளி என்றும் ஜூரிசபையினர் ஏகமனதாகத் தெரிவித்ததைஏற்றுக்கொண்டு நீதியரசர் தீர்ப்பளித்தார்.

தீர்ப்பளிக்குமுன் முடிக்குரிய வழக்கறிஞர், 2-ம் எதிரி ஏற்கெனவே இருவழக்குகளில்குற்றவாளியாகக் காணப்பட்டிருக்கிறார் என நீதியரசரின் கவனத்திற்குக்கொண்டுவந்தார்.

இவ்வழக்கில் 1964-ம்ஆண்டு ஏப்பிரல் 28-ம்தேதி வேலன் சின்னத்தம்பி என்பவரை கே. துரையன், எல செல்லக்கண்டு ஆகியோர் கொலைசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது:

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. கண்ணுத்துரை, திரு கே. கணபதிப்பிள்ளையின் அனுசரணையுடன் ஆஜரானார், எதிரிகளுக்காக அரசாங்கத்தால் திரு. ஆர். கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார்.

## வேலையற்றிருக்கும் உடற்பயிற்சி ஆசிரியர்களின் கோரிக்கை

### கல்விமந்திரியுடன் யாழ்.எம்.பி.பேசுவார்

யாழ்ப்பாணம், புதன்

வேலையற்றிருக்கும் உடற்பயிற்சிப் போதனையாளர்களின் நிலைமைபற்றி யாழ்ப்பாண எம் பி திரு ஜி ஜி பொன்னம்பலம் விரைவில் கல்விமந்திரி திரு ஐ ஆர் எம் இரியகொலையைச் சந்தித்துப் பேசுவார் என அறியப்படுகிறது.

வேலையற்றிருக்கும் உடற்பயிற்சிப் போதனையாளர் குழு ஒன்று திரு ஜி ஜி பொன்னம்பலத்தை சந்தித்து தங்கள் கஷ்டமான நிலைமைபற்றி எடுத்துக்கூறியபொழுது, கல்விமந்திரியிடம் அவர்களின் நிலையை எடுத்துக்கூறுவதாகவாக் குறுதியளித்துள்ளார் என்று தெரியவருகிறது.

கடந்த 4 வருடங்களாகத் தாங்கள் வேலையற்றிருப்பதாகவும், கிழக்குமாகாணங்களில் மட்டக்களப்பு, திருகோணமலை, அக்கரைப்பற்று, கலமுனை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளிலும், மன்னாரிலுள்ள கல்லூரிகளிலும், உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலிருப்பதாக அக்குழு தெரிவித்துள்ளது.

இம்மாதம் 8-ம் திகதி நடைபெறவிருக்கும், மாவட்ட இணைப்புக்கூட்டத்தில், இவ்விஷயம் பற்றி எடுத்துக்கூறுவதாக திரு. பொன்னம்பலம் உடற்பயிற்சி போதனையாளர் குழுவிடம் தெரிவித்துள்ளாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உலகெலாம் ஒரு சத்திரம்; எனவே, ஓய்த்திருக்கத் தனி இடம் தேடாதே. மக்களெல்லாம் உன் உறவினர்; எனவே அவர்களால் உனக்கு உபத்திரவமே விளையுமே.

— சீனப்பழமொழி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna

[illegible]

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 23 உ (5-5-65)


## எதிர்க்கட்சியினரின் கண்டன விளைவுகள்

தேர்தல் முடிந்து 'தேசிய அரசாங்கம்' ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து எதிர்க்கட்சியினர் குறிப்பாக இடதுசாரிக் கட்சியினர் பின்பற்றும் கண்டன முறைகள் கவலையளிப்பதாகவுள்ளது.

புதிய பார்லிமென்டின் முதற் கூட்டத்தில் இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான திரு. பீட்டர் கெனமன் ஜனப்பிரதிநிதிகள் சபையில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடுகையில் தமிழரசுக்கட்சிக்கும் தமிழ்க்காங்கிரசுக்கும் அரசாங்கம் நாட்டை விற்றுவிட்டது என்று குற்றம் சாட்டினர். அரசியல்வாதத்துக்கு இது உற்சாகமளிப்பதாக இருப்பினும் அது அரசியலல்ல! தமிழரசுக்கட்சியும் தமிழ்க்காங்கிரசும் வடக்கு மாகாணத்தில் எல்லாத் தொகுதிகளிலிருந்தும் கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையான தொகுதிகளிலிருந்தும் பார்லிமெண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள கட்சிகள். ஒருசில பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்கு நாட்டை விற்றுவிட்டதாகக் கூறுவது பொறுப்பற்றதும் நஞ்சத்தன்மை உடையதுமாகும். கூட்டரசாங்கம் அமைக்கப்பட்ட போது சமசமாஜக்கட்சியினருக்கு நாட்டை விற்றுவிட்டதாகக் கூறியிருந்தால் அது எவ்வளவு நஞ்சத்தன்மையினதாக இருந்திருக்குமோ அது போலவேதான் இதுவுமிருக்கும். தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சிகளுக்கு நாட்டை விற்றுவிட்டதென்ற கூற்று உண்மையில் தமிழருக்கு நாட்டை விற்றுவிட்டதாகக் கூறும் விஷமத்தனமான கருத்தை அடிப்படையாகக் கொண்டதுதான். இவ்விதப் பேச்சு தவறானது மட்டுமல்ல வகுப்புத் துவேஷத்துக்கு வித்திடுவதுமாகும்.

'மார்க்ஸீயம்' சிறுபான்மையினரை ஒன்றுசேர்த்து பாதுகாப்பளிக்கும் சிறந்த இலட்சியத்தையுடையது. ஆனால் நமது நாட்டில் இப்பொழுது மார்க்ஸீயவாதிகள் சிலர் அரசியல் ஆதிக்கத்தைப் பெறவே முயற்சி செய்வதாகத்தோன்றுகிறது. இப்பொழுது பார்லிமெண்ட் விவாதங்கள் பழைய வகுப்புவாதக் கொள்கைகளைத் தூண்டுவதாக இருப்பதுஏன்? வகுப்புவாதிகளும் பிற்போக்குவாதிகளும் ஒன்று சேர்ந்து 'தேசிய' அரசாங்கம் ஒன்றை அமைத்திருப்பதாகவும் இவர்களுக்குள் கொள்கை வேறுபாடுகள் நிறையவிருப்பதாகவும் இடதுசாரித் தலைவர்கள் கூறுகின்றனர். கூட்டுஅரசாங்கத்தை இக்கட்சிகள் ஒன்று சேர்த்து எதிர்த்து நின்றது அவர்களுக்குள் ஒற்றுமையேற்பட்டதனால்தான் என்று சொல்ல இடமுண்டு. கூட்டுஅரசாங்கத்தை வீழ்த்தியதும் தேர்தலில் இக்கட்சிகள் ஒன்று சேர்ந்து போட்டி தவிர்ப்பு ஏற்படுத்திக் கொண்டதும் பின்னர் தேசிய அரசாங்கம் அமைத்துக் கொண்டதும் புதிய அறிகுறியாகவும் இருக்கலாம். வகுப்புத் துவேஷத்தைக் கிளப்புபவர்கள் என்று குற்றம்சாட்டுவதன் மூலம் புதிய வகுப்புவாதத்தைத் தூண்டிவிடும்முறையில் இப்பொழுது எதிர்க்கட்சியினர் சிலர் பேசுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டமொன்றில் இடதுசாரிப் பிரமுகரான திரு. எச். ஜி. எஸ். ரத்னவீர பேசுகையில் தமிழரசு—யு. என். பி. ஒப்பந்தம்பற்றிக் கேட்பது வகுப்புவாதமா? என்று கேட்டார். ஒப்பந்தம்பற்றிய கேள்வியுடன் நிற்பது வகுப்புவாதமல்ல. ஆனால் 'வடை, தோசை தின்னும் தமிழர், நல்லெண்ணெய் நாறுகிறது' போன்ற கூச்சல் அரசியல்வாதமல்ல. அது வகுப்புத் துவேஷத்தைத் தூண்டுவதுதான்!

தொழிலாளரை ஒற்றுமைப்படுத்த வேண்டிய இடதுசாரியினர் தமிழ்த் தொழிலாளரின் உணவு, உடை பழக்கவழக்கங்கள்பற்றி சுலோகங்கள் கோஷிப்பது தொழிலாளரிடையில் பிளவையேற்படுத்துவதாகும். இடதுசாரியினர் சிலரின் பேச்சும் செயலும், தொழிலாளரை ஒற்றுமைப்படுத்தும் திட்டத்தையும் புரட்சிகரக் கொள்கையையும் கைவிட்டுப் பார்லிமெண்ட்மூலம ஆதிக்கம் பெறச் செய்த முயற்சியில் ஏற்பட்ட தோல்வியின் ஆத்திரத்தினால் உண்மையான மார்க்ஸீயக் கொள்கையைக் கைவிட்டுவிட்டனர் என்று சீனச் சார்புடைய கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர்களும் புரட்சிகர சமசமாஜக்கட்சித் தலைவர்களும் கூறும் குற்றச்சாட்டுகளில் உண்மை இருப்பதாகத் தோன்றுகிறது.

தொழிற்சங்கங்கள் வளர்ச்சியடைய வேண்டுமென்பதும் தொழிலாளர்கள் ஒற்றுமைப்பட வேண்டுமென்பதுவுமே நமது விருப்பும். ஆனால் சந்தர்ப்பவாத தலைமைப்பீடத்துக்குத் தொழிலாளர் இடம் கொடுக்கக்கூடாது.

இடதுசாரித் தலைவர்கள் வகுப்புவாதத்துக்கு ஊக்கமளிக்க விரும்பாதவர்களாக இருக்கலாம், ஆனாலும்பொறுப்பற்ற முறையில் பேசுபவர்கள் விஷயத்திலும் நடந்து கொள்பவர் விஷயத்திலும் பொறுப்புள்ள தலைவர்கள [illegible] ணம் செலுத்துவது [illegible]

### உற்சவ விழா

சங்கானை, செவ்வாய்

சங்கானை வெல்லில் சுப்பிரமணியசுவாமி கோவில் உற்சவம் நாளை ஆரம்பமாகி மே மாதம் 14-ந் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவுடன் முடிவடையும். மறுநாள் சனிக்கிழமை தீர்த்தமும், ஞாயிற்றுக்கிழமை பூங்காவனமும் இடம்பெறும்.

# ஆறுகிரகங்களின் சேர்க்கை யோகமும் சூரியகிரகணமும்

இம்மாதம் 30-5-65 ல் சம்பவிக்கும் ஆறு கிரகங்களின் சேர்க்கையினாலும் சூரிய கிரகணத்தினாலும் உலகமக்கலுக்கு ஏற்படக்கூடிய நன்மை தீமைகள் குறித்து மல்லாகம் ச. சிவகாமசுந்தரி எழுதுவதாவது:-

வேதம் சிருஷ்டிக்கு முன் உள்ளது. இது அநாதி தெய்வ தத்துவமான பிரணவ சொரூபமாய் உள்ளது. இந்த வேதம் என்னும் சுருதியின் ஓர் அங்கமே வான சோதிட சாஸ்திரம்.

கற்ப காலத்தொடக்கத்தில் பரமேஸ்வரன் இதைப் பிரமாவிடம் ஒப்படைப்பர். அதன்படியே உலகமும் சூரிய சந்திர நட்சத்திரங்களும் பிரமாவால் தோற்றுவிக்கப்படும்.

அப்படித் தோற்றுவிக்கப்பட்ட சூரியாதி கிரகங்களிலிருந்துபெறும் ஒளி, ஒளி மூலம் உலகில் தோற்றும் சகல சீவன்களுக்கும் அவரவர் பிராரத்துவ, ஆகாமிய சஞ்சித கர்மங்கள் நிர்ணயிக்கப்பட்டு பரிபக்குவம் அடைந்ததும் ஆன்மாக்கள் சிவசாயுச்சிய பதவியை அடைவர்.

இவற்றை முன்னதாக அறிந்துகொள்வதற்கும், கஷ்டம் வரும்போது அதற்கேற்ற சாந்தி செய்வதற்கும் சூரிய சித்தாந்தம் போன்ற கணித நூல்களையும், பராசரகோரை போன்ற பலன் கூறும் நூல்களையும் ரிஷிகள் கூறியுள்ளார்.

இவற்றோடு நில்லாது நம்தமிழ் நாட்டு ரிஷிகள் கலியுகம் முழுக்காலமும் உலகில் நடக்கப்போகும் பலன்களை அகஸ்தியர்நாடி, காக்கை புஷண்டர்நாடி, துருவ நாடி போன்ற பல நாடி ஏடுகளில் எழுதிவைத்துப் போயினர்.

அப்படி எழுதிவைத்த ஏடுகளில் கூறியபடி உலக யுத்தங்கள், மகாத்மாகாந்திபோன்ற மகான்களின் பிறப்புக்கள், வால் வெள்ளி தோற்றுவதால் அக்காலம் ஏற்படும் நன்மை தீமைகள், அரசு மாறுதல்கள் கூறப்பட்டு அதன்படி நடந்தேறியிருப்பதையும் பலர் அறிவர்.

இதேபோல் தனித்தனி மனிதரும் பூர்வகன்மத்தால் பிறப்பெடுக்கும் ஊர், பெயர், தொழில், மனைவி, பிள்ளைகள், குலம், சமயம், மரணம், முற்பிறப்பு, மறுபிறப்பு முதலியன கூறப்பட்டுள்ள ஏடுகளைவாசித்தறியும்போது, இந்த திரிகால ஞானிகளை யார்தான் போற்றாதிருப்பர்.

மிகப்பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடியால் 1989-ல் கண்டுபிடித்ததாகக் கூறப்படும் புளூற்றோ என்ற கிரகத்தை இற்றைக்கு 3090 ஆண்டுகளுக்கு முன் காக்கையரால் திருத்தி எழுதப்பட்டதாகக் கூறப்பட்டுள்ள நாடி ஏட்டில் குறிக்கப்பட்டு அதன் பெயர் "பிரமசூரி" என அக்காலம் அழைக்கப்பட்ட தென்னால் இந்த ரிஷிகளின் ஆற்றல் தான் என்னே.

தற்கால விஞ்ஞானத்தால் கண்டு பிடிக்கப்பட்ட மின்சாரமோ, ஆகாய விமானமோ, அணுவைப் பிளத்தலோ போன்ற பல விஷயங்கள் இந்த ஏட்டில் கூறப்படுவதோடு, அணுகுண்டை யுத்தத்தில் பாவிக்கும் காலம், அதன் விஷத்தகிப்பினால் பிறக்கும் ஊறு உள்ள பிள்ளைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

தற்கால வழக்கில் இல்லாத சில கணித முறைகள் இவ் விருஷிகளால் கையாளப்பட்டிருக்கிறது. உதாரணமாய் சப்தரிஷிகளென்று அழைக்கப்படும் துருவ நட்சத்திரத்திற்கு அருகில் உள்ள நட்சத்திரக் கூட்டத்தைக் கொண்டே அயன சலனத்தைக் கணித்தார்கள்.

ஆங்கிலத்தில் 'Precision of the Equinox' என்று கூறப்படும் அயன சலனம் 'Great Bear' அல்லது சப்தரிஷியென்னும் நட்சத்திரக் கூட்டத் [illegible]

ஓர் விந்தையாகத் தோன்றும் 360 பாகைகள் உள்ள கிராந்தி விருத்தத்தில் அச்வினி நட்சத்திரத்திலிருந்து இரு கோடுகளை சப்தரிஷி நட்சத்திரங்களின் முதல்நட்சத்திரத்திற்கு ஒன்றும் கடைசி நட்சத்திரத்திற்கு ஒன்றுமாய்க் கீறினால் இக்கோடுகளின் இடைவெளியில் உள்ள கோணம் 36 பாகைகளாகும்.

(5-ம் பக்கம் பார்க்க)

## சஷ்ட கிரக சேர்க்கை

— எஸ். கோபாலசாமி —

(கந்தரோடை)

வைகாசி மாதத்தில் நிகழவிருக்கும் ஆறு கிரகங்களின் சேர்க்கை கண்டிப்பாக இந்நாட்டில் அடிமைத்தளையை அறுக்கவிருப்பதாக உள்ளது. எமது நாட்டில் இப்போது குறிப்பாகத் தமிழ்நாடு (வடக்குக் கிழக்கு) முழுவதும் தமிழ் மக்களுக்குண்டான பெரும் நெருக்கடிகள் நீங்கி அவர்கள் முன்னைநாட்களில் எப்படி முழுமூச்சுடன் நாட்டில் சீர்திருத்த வழிகளைக்கொண்டார்களோ அந்த வழிகளிலே நடைபடவைக்க கோள்கள் குறிக்கின்றன. தமிழமக்களுக்குத் தன்னம்பிக்கை உண்டாகக் கூடியவகையில் கோள்கள் அமைகின்றன. சுக்கிரனுடைய ஆட்சி வீடான ரிஷப இராசியிலே தான் இந்தக் கிரகச் சேர்க்கை நிகழ்கிறது. ஸ்திர ராசி எனப்படும் இந்த இடப ராசியில் குருபகவான் பங்குனி மாதத்திலேயே மாறிவிடுவார், இப்பொழுது பார்வையாகி உள்ளது. சரராசிகள் மேடம், மகரம், சிங்கம் என்பன கிரகப்பிரவேசம், கும்பாபிஷேகம் போன்றவைகளுக்குச் சிறந்தவை. ஸ்திர ராசி இடபம், கும்பம், கடகம் என்பன மாங்கல்யதாரணம், சுபகாரியங்கள் செய்வதற்குச் சிறந்தன. ஸ்திர ராசியில் இரண்டரை நாட்களுக்குக் கிரகங்கள் கூட்டுச் சேர்வதினால் செவ்வாயில் பாதிக்கப்படுவதினால் இந்தியா இலங்கை யுத்தகேந்தர ஸ்தானங்களாக அமைய இடம் உண்டு.

புதன் சுக்கிரன் இராகு சூரியன் சந்திரன் குரு என்னும் ஆறு கிரகங்களும் இந்த வீட்டில சேர்வதன பலன் சிறிது ஆராயவேண்டியதே சுக்கிரன் ஆட்சி வீடு இடப இராசி இதனால் கீழ்நிலையில் இருப்பவர்கள் மேல்வருதல இடம் பெறும். சந்திரன்- புலவர்கள், வித்துவான் கஷ்டங்கள், பின் நிவர்த்தி. புதன்- தமிழ்பாஷை கலாசாரம் தமிழினம் மேல்நிலை அடைதல். கேது- உச்சப் பார்வை ஞானம் தெய்வவழிபாடாகுதல். வியாழன்- பிராமணர் அரசர்கள பீடை பின் அமைதி. சூரியன்- அகவிலையேற்றம் விளைவு குன்றல். இராகு- விஷசீர்பீடைத் தொத்துநோய் பரவல் பொருளழிவு விரும்பியவை தடைப்படல் என்பன நிகழவிருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்தந்தக் கிரகங்களுக்கு வேண்டிய தோஷவிதிகள்- உரிய தெய்வ வழிபாடுகள் செய்வது விரும்பத்தக்கது. இராகு- பத்திரகாளி குரு தெட்சணாமூர்த்தி. கேது- துர்க்கை. புதன்- திருமால். சூரியன்- சிவன். சந்திரன்- உமையம்மை. சுக்கிரன்- அன்னபூர்ணேஸ்வரி இலக்குமி. செவ்வாய்- சுப்பிரமணியர் ஆகியோரை வழிபடுதல் நல்ல பலனைத் தரக்கூடியது. மேலும் ஆலயங்களில் இலட்சம் நவக்கிரக ஓமம் இலட்ச அர்ச்சனைகள் அபிஷேக ஆராதனைகள் செய்தல் எல்லோரையும் நல்வழிக்கு ஆக்கிவைக்கக்கூடியதே.

## நாட்டிலும் நகரிலும்

அரசாங்கத்தின் தலையில் மிகப் பெரிய சுமையாயிருப்பது அரிசி. கூப்பன் கடையில் நாங்கள் அரிசிக்குக்கொடுக்கும் விலையிலும் பார்க்க இரண்டு மடங்குகளும் மேலான விலை கொடுத்து வெளிநாடுகளிலிருந்து வாங்கி எங்களுக்குத் தருகிறது. இந்தப் பளுவை தன்னிடமிருந்து குறைத்துக் கொள்ள எந்த அரசாங்கமும் விரும்புவதில்லை அப்படிச்செய்யுமாயின் அது அடுத்த தேர்தலில் 'பல்டி' அடிக்குமென்பது எங்கள் அரசியல் தலைவர்களுக்குநன்றாகத்தெரியும். முன்பு ஒரு நிதிமந்திரி அரிசி விலையை ஏற்றப்போவதாக உத்தேசித்து அப்பதவியைப் பறிகொடுத்தகதை தெரியுமல்லவா?

இலங்கையில் நாம் உற்பத்தி செய்யும் அரிசி எங்கள் தேவைக்குப் போதாமலிருக்கிறது. ஆண்டாண்டு தோறும் அரிசி உற்பத்தி விகிதமும் அரிசி உற்பத்தியாகும் நிலப்பரப்பும் அதிகரித்துக்கொண்டு வருவது உண்மை தான். ஆனால் அதையும்விட அதிகரிக்கிறது எமது வயிறுகளின் தொகை! அதாவது சனத்தொகை கூடுகிறது. பின்னுக்கு வரப்போவதை அறியாமல், சிலவருடங்களுக்கு முன்பிருந்த அரசாங்கம் கூடிய விலைகொடுத்து அரிசியை வாங்கி குறைந்த விலைக்கு விநியோகம் செய்தது. அதற்குப் பின்வந்த அரசாங்கங்கள் இந்த வழக்கத்தை மாற்றப் பயப்படுகின்றன. அரிசி விலையை ஏற்றப்போகிறோம் என்று எந்த அரசியல் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் துணிந்து தெரிவிக்கிறதோ அது மண் கவ்வுவது மெய்.

அரிசி மூடைகள் அள்ளிக் கொண்டு போகும் இந்தப் பெருந்தொகை பணத்தை மிச்சம் பிடித்தால் நாடு வளம் பெறத்தக்க வேறு முயற்சிகளில் அதைச் செலவிடலாம். ஆனால் எந்த அரசாங்கம் துணிந்து அரிசி விலையில் கை வைக்கும்? வரவு செலவுத் திட்டம் தயாரித்துக் கொண்டிருக்கும் நிதி மந்திரிக்கு இது எவ்வளவு பெரிய தலையிடியாயிருக்கும் என்று ஊகித்துக்கொள்ளலாம்.

இந்த நிலையில் இலங்கையின் சனத்தொகைப் பெருக்கம் ஆசியாக் கண்டத்திலேயே முதன்மை ஸ்தானம் வகிக்கிறதென்ற செய்தி அவருக்கு சற்றேனும் மகிழ்ச்சியைக் கொடுக்கமாட்டாது. சனத்தொகைப் பெருக்கத்துக்குப் பேர்போன இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளையும் இலங்கை தோற்கடித்து விட்டது. 1964-ம் ஆண்டில் எமது விகிதம் 2.7 என்று ஐ. நா. ஸ்தாபன அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. விளக்கமாகக் கூறினால் ஒவ்வொரு வருடமும் 100-க்கு 2 7 பேர் அல்லது 1000-க்கு 2.7 பேர் அதிகரித்து வருகிறோம். இவ்வருடம இலங்கையின் சனத்தொகை 1 கோடியே 10 லட்சம் (1,100,000) என்று வைத்துக்கொண்டால் வருகிற வருடம் 1,129,700 பேருக்கு உணவு தேடவேண்டும்.

இந்தியாவின் சனத்தொகைப் பெருக்கம் 2.3 ஆகக் குறைந்துவிட்டது. இதற்கு ஒரு முக்கிய காரணம், அங்குள்ள அரசாங்கம் சனத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்ட தீவிரமான முயற்சிகள் தான். அங்கே கிராமங்களிலும் பட்டினங்களிலும் அரசாங்க பொறுப்பில் குடும்பக்கட்டுப்பாடு 'கிளினிக்'குகள் இயங்கி வருகின்றன. அவற்றில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் குடும்பத்தைக் கட்டுப்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டு அதற்கு வேண்டிய ஆலோசனைகளும் மருந்து முறைகளும் கொடுக்கப்படுகின்றன. இங்கே இலங்கையில் வேலையில்லாத சில பணக்காரர் தங்கள் அந்தஸ்தை

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பாகிஸ்தான் எல்லைகளிலிருந்து சிவிலியன்கள் வெளியேற்றம்

## முழுப் போருக்கான ஆயத்தமாம்

## பொலீசுக்கு பதில் துருப்புக்கள் குவிகின்றன

### கட்ச் பகுதியில் மீண்டும் பீரங்கிப் பிரயோகம்

புதுடில்லி, மே 4

கட்ச் பகுதியில் நேற்று மாலை 4 மணி முதல் பாகிஸ்தானிய துருப்புக்கள் பலமான பீரங்கிப் பிரயோகம் செய்துவருவதாய் அறிவிக்கப்பட்டது. அதேசமயம் டின் என்ற காவல் நிலையிலிருந்து அவர்கள் காலி செய்துவிட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

மேற்கு வங்காள எல்லை நெடுகவுள்ள பாகிஸ்தான் மக்கள் பெருமளவு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்றும் அங்குள்ள பல எல்லை நிலைகளில் பொலிசார் அப்புறப்படுத்தப்பட்டு ஏராளமாக பாகிஸ்தான் துருப்புக்கள் குவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் புதுடில்லிக்குக் கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. இதையொட்டி மேற்கு வங்காள அரசாங்கம் தனது பாதுகாப்புகளைப் பலப்படுத்தியிருக்கிறது.

மேற்கு பாகிஸ்தான் அரங்கில் துருப்புக்கள், டாங்கிகள், கவச அணிகள் கொண்ட பெரும் போர் ஆயத்தங்களை பாகிஸ்தான் செய்துவருவதாயும் அறிவிக்கப்பட்டது.

மேற்கு பஞ்சாப நகரங்களிலும் பாகிஸ்தானியர் பெருமளவு படைகளைக் குவித்திருக்கிறார்கள்.

கிழக்கு பாகிஸ்தான் எல்லை நெடுகிலும் மேற்கு பாகிஸ்தானிலிருந்து முப்படைகளின் புதிய அணிகள் கடல்மூலமும் விமானமூலமும் கொண்டுவரப்படுகின்றன. கூச்பீகாரிலும் பெருமளவு படைகள் குவிந்துவருகின்றன. அஸ்ஸாம் எல்லை நெடுகிலும் அவர்கள் குவிந்துள்ளார்களாம.

முழு போருக்கு பாகிஸ்தான் தயாராகும் என ஜனாதிபதி அயூப்கான் விடுத்த அறிக்கையையொட்டியே இவ்வாறு நடைபெற்றுவருவதாகக் கூறப்படுகிறது.

அதேசமயம் ஸ்தல மக்களுக்கு நாசவேலை சம்பந்தமாக பாகிஸ்தான் கொரில்லா பயிற்சியளித்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

## ரஷ்யா கண்டனம்

மாஸ்கோ, மே 4

கட்ச் பகுதியில் எல்லை மீறலை சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் கண்டித்திருக்கிறார். மாஸ்கோவிலுள்ள இந்தியத் தூதருடன் அவர் நடத்திய பேச்சில், ஆக்கிரமிப்பாளர்கள் மீது ஒருபோதும் ரஷ்யாவின் அனுதாபம் இருக்காது எனக் கூறினார்.

## மசோதா நிறைவேற்றம்

லண்டன், மே 4

பொது இடங்களில் இனபாரபட்சம் காட்டப்படுவதற்குச் சிறைத்தண்டனை அளிக்கும் மசோதா நேற்று காமன்ஸ் சபையில் 12 அதிகப்படி வாக்குகளால் இரண்டாவது தடவை நிறைவேற்றப்பட்டது.

## ஒடிங்கா ஒரு கம்யூனிஸ்ட்

நைரோபி, மே 4

கென்யா உப ஜனாதிபதி திரு. ஒடிங்கா கம்யூனிஸ்ட் அனுதாபியென 5 கென்யா எம். பி.க்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள்.

## இன்று 4-ம் டெஸ்ட்

பிரிட்ஜ்-வுன் (பார்படோஸ்) மே 6

இன்று மேற்கிந்தியக் கோஷ்டிக்கும் ஆஸ்திரேலியக் கோஷ்டிக்குமிடையே 4-வது கிரிக்கெட் டெஸ்ட் இங்கு ஆரம்பமாகிறது.

மேற்கிந்தியக் கோஷ்டியில் 3-வது டெஸ்டில் விளையாடிய ஆட்டக்காரர்களிடையே மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

சோபர்ஸின் தலைமையிலுள்ள மேற்கிந்தியக் கோஷ்டியில் ஹண்ட், டேவிஸ், கன்ஹாய், புச்சர், நேர்ஸ், சொலமன், ஹென்றிக்ஸ், ஹால், கிரிபித், கிப்ஸ ஆகியோரும், 12-வது நபராக லேஷ்லியும் இருக்கிறார்கள்.

இதுவரை மேற்கிந்தியா 2 டெஸ்டுகளில் வென்றிருக்கிறது, 1-டெஸட் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

## டில்லியில் மவுண்ட்பேட்டன்

புதுடில்லி, மே 4

மவுண்ட்பேட்டன் பிரபு நேற்று மாலை டில்லி வந்து சேர்ந்தார். பிரிட்டனில் காமன்வெல்த் பிரஜைகள் குடியேற்றம்பற்றி அவர் இந்திய மந்திரிகளுடன் பேச்சுநடத்துவார்.

## பூகம்பம்! 100 பேர் பலி!!

வாஷிங்டன், மே 4

மத்திய அமெரிக்க நாடான எல்சல்வடோரில் நேற்று ஏற்பட்ட ஒரு பூகம்பத்தில் 100 பேர் கொல்லப்பட்டனர், பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். 4000க்கு மேற்பட்ட வீடுகள் அழிக்[கப்பட்டன] என்று அது குறிப்பிடுகின்றது.

## டொமினிகன் குடியரசு பற்றி பாதுகாப்புசபை விவாதம்

### மேலும் 6,500 அமெரிக்க துருப்புகள் அங்கு செல்கின்றனர்

நியூயோர்க், மே 4

டொமினிக்கன் குடியரசு சம்பந்தமாக பாதுகாப்பு சபை நேற்று விவாதித்தது.

அங்கு அமெரிக்கத் துருப்புக்கள் இறக்கப்பட்டன சபை கண்டனம் செய்யவேண்டும் என ரஷ்யா கேட்டுக்கொண்டது.

கியூபாவின் வேண்டுகோளின் பேரில் அது சபையில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டது. சபை விவாதத்தில் கியூபா அனுமதிக்கப்பட்டது குறித்து அமெரிக்காவுக்கு ஆட்சேபனை இல்லையென அமெரிக்கப் பிரதிநிதி திரு அட்லாய் ஸ்டீவின்ஸன் கூறினார்.

ஆனால் விவாதத்தில் கலந்துகொள்ள கியூபா அனுமதி கோரியதிலிருந்தே டொமினிக்கனில் கம்யூனிஸ்ட் ஆக்ரமிப்பு இருப்பது நிரூபிக்கப்பட்டுவிட்டதாக திரு. ஸ்டீவின்சன் கூறினார்.

கியூபா பிரதிநிதி பேசுகையில் அமெரிக்கத் துருப்புக்கள் டொமினிக்கனிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என வற்புறுத்தினார்.

அதே சமயம் வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் விடுத்த அறிக்கையில் சட்டபூர்வ அரசாங்கத்தைக் கவிழ்க்க கம்யூனிஸ்ட்டுகள் முயலும்போது தாங்கள் உல்லாசக் கதிரைகளில் இருந்துகொண்டிருக்க முடியாது எனக் கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் சிலி, ஆஜன்டீனா ஆகிய நாடுகளில் அமெரிக்க தூதராலயங்களுக்கு எதிரே மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள், டொமினிக்கன் குடியரசில் கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராகச் சண்டையிட துருப்புக்களை அனுப்புமாறு ஜனாதிபதி ஜோன்ஸன் லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இதே சமயம் அமெரிக்கத் துருப்புக்கள் டொமினிக்காவில் வந்து இறங்கிய வண்ணம் இருக்கின்றன.

மேலும் 6500 அமெரிக்கத் துருப்புக்கள் அங்கு அனுப்பப்படவிருக்கின்றன.

## 40 லட்சம் பேரைக் கொன்ற ஹிட்லரின் அதிகாரிகள்

### ஜூன்மாதம் தீர்ப்பு

பிராங்பர்ட், மே 4

ஜெர்மன்சரித்திரத்தில் மிகப் பெரும் ஆஷ்விட்ச் முகாம் படுகொலை வழக்கு விசாரணை இப்போது ஒரு முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது. இந்த முகாமைச் சேர்ந்த 20 முன்னாள் அதிகாரிகளின் வாக்குமூலம் மட்டுமே பாக்கியிருக்கிறது.

17 மாதங்களாக தொடர்ச்சியாக நடைபெற்ற இவ்வழக்கில் இதுவரை 380 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

இந்த வழக்கில் போலந்திலுள்ள ஆஷ்விட்ச் படுகொலை முகாமில் 40 லட்சம் பேரைக் கொலைசெய்ததாக ஹிட்லரின் 20 அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. இவர்களில் பெரும்பாலோர் யூதர்கள். இன்று 30 போலந்து சாட்சிகளிடமிருந்து எழுத்துமூலமான வாக்குமூலங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கடந்த டிசம்பர் மாதம் 24 வழக்கறிஞர்களும், நீதிமன்ற அதிகாரிகளும் இந்தப் படுகொலை முகாமுக்கு விஜயம் செய்து காஸ் சவக்குழிகளையும், பிணங்கள் எரிக்கப்பட்ட திறந்த குழிகளையும் விஷஊசி ஏற்றப்பட்ட இடங்களையும், கேள்விகேட்டு கைதிகள் சாகும்வரை அடிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டனர்.

ஜூன் மத்தியில் தீர்ப்புவழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பத்திரிகைச் செய்தி தவறு

புதுடில்லி, மே 4

சிக்கிம்-திபேத் எல்லையில் இந்திய-சீனத் துருப்புகளுக்கிடையே கைகலப்பு ஏற்பட்டதாக டில்லி பத்திரிகையொன்றில் வெளியான தகவலில் உண்மை கிடையாதென அறிவிக்கப்பட்டது.

## பர்மாவில் சோஷலிஸம்

ரங்கூன், மே 4

பர்மாவில் குத்தகை விவசாயிகள் இனிமேல் குத்தகை செலுத்தவேண்டியதில்லை. இதனால் 11 லட்சத்துக்கு மேற்பட்டோர் நன்மையடைவார்களென அறிவிக்கப்பட்டது.

## தென்வியட்னாமுக்கு மேலும் துருப்புகள்

வாஷிங்டன், மே 4

அடுத்த 3 நாட்களில் மேலும் 3500 அமெரிக்கத் துருப்புகள் தென்வியட்னாமுக்கு அனுப்பப்படுவார்களென இங்கு அறிவிக்கப்பட்டது.

## இருதய சாதனை

மாஸ்கோ, மே 4

நேற்று 4 இருதய நோயாளர்களின் அசல் இருதயத்துக்குப் பதில் வேறு இருதயங்களை வெற்றிகரமாகப் பொருத்தி ரஷ்ய டாக்டர்கள் ஒரு சாதனையை நிலைநாட்டினர்.

## ஷேக் அப்துல்லா

புதுடில்லி, மே 4

ஷேக் அப்துல்லா கோஷ்டியினரின் பாஸ்போர்ட் கடந்த சனிக்கிழமை முதல் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாயும் எனினும் அவர் மதீனாவுக்குச் செல்லத் தற்காலிக அவசர அனுமதி வழங்குமாறு அங்குள்ள இந்திய தூதராலயத்துக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாயும் கூறப்பட்டது.

நேற்று ஷேக் சவூதி அரேபிய மன்னர் பைஸலை இரண்டாவது முறையாகச் சந்தித்துப் பேசினார்.

அலிகார்

## வகுப்பு வாதிகள் விலக்கப்படுவர்

புதுடில்லி, மே 4

அலிகார் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் தாக்கப்பட்டதற்கு உடந்தையான ஒவ்வொருவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வகுப்புவாதம் கொண்ட பிற்போக்காளர்கள் அங்கிருந்து விலக்கப்படுவர்கள் என்றும் கல்வி மந்திரி திரு. சக்ளா லோக சபையில் அறிவித்தார்.

## "கடைசி பாகிஸ்தானி உயிருடன் இருக்கும்வரை போரிடுவோம்"

ராவல்பிண்டி, மே 4

பாகிஸ்தான் இந்தியாவுடன் எல்லைப் பிரச்னைகளை அமைதி வழியில் தீர்த்துக் கொள்ள விரும்புவதாயும், ஆனால் தனது பிரதேசத்தை இந்தியாவுக்கு தியாகம் செய்ய ஒருபோதும் தயாராய் இல்லையென்றும் ஜனாதிபதி அயூப்கான் அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் பாகிஸ்தானிய பிரதம சேனாதிபதி ஜெனரல் மூஸா விடுத்துள்ள ஒரு அறிக்கையில் "இந்தியா ஊடுருவல் செய்தால் கடைசி பாகிஸ்தானி உயிருடனிருக்கும் வரை போராடுவோம்" எனக் குறிப்பிட்டிருக்கிறார்,

இதற்கிடையில் இரு நாடுகளுக்குமிடையே யுத்தநிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் தொடர்ந்து முயற்சி செய்துவருவதாய் அறிவிக்கப்படுகிறது.

# நாம் தற்காப்புகூட செய்யக்கூடாதா?

### அயூபுக்கு சாஸ்திரி கேள்வி

புதுடில்லி, மே 4

கட்ச்பகுதியில் பிராந்திய தாவா எதுவும் இருப்பதாகத் தாம் கருதவில்லையென்றும், பாகிஸ்தான் அதிபர் தாம் விரும்பியபடி விரும்பிய இடத்தில் ஆக்கிரமிப்பு நடத்த முடியும் என்றும் இந்தியா தற்காப்புக்கூட செய்யக்கூடாது என நினைக்கிறார் என்றும் திரு லால்பகதூர் சாஸ்திரி ராஜ்யசபையில் பேசியபோது குறிப்பிட்டார்.

நேற்று அவர் சபையில் இரு தடவைகள் பேசினார்.

திரு. அயூப்கான் தமது செயலைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என வற்புறுத்த விரும்புவதாயும் அவர் கூறினார். ஆக்கிரமிப்பாளரை விரட்டியடிப்பது என்றும் உறுதியை ராஜ்யசபை நேற்று ஏகமனதாக வெளியிட்டது.

இதற்கிடையில் கடந்த நூற்றாண்டு இறுதியில் இந்திய சர்வே ஜெனரல் பதிப்பித்த கட்ச்பகுதி நிலப்படம் நேற்று புதுடில்லியில் வெளியிடப்பட்டது.

பாரதத்தைத் தாக்கினால் ஒன்றும் நேராது என பாகிஸ்தான் கருதியிருக்குமானால் அது தவறு என காங்கிரஸ் அக்ராசனர் காமராஜ் கூறினார். இந்தியா படைவலிமையுடனிருக்கிறது என்றும்அவர் கூறினார்.

பாகிஸ்தான் தனது முந்திய நிலைக்குத் திரும்பினாலன்றி பேச்சு நடத்த முடியாது என பிரதமமந்திரி திரு சாஸ்திரி விடுத்த அறிக்கையைத் தாம் வரவேற்பதாக தி. மு. க. தலைவர் அண்ணாதுரை கூறினார்,

பல்வேறு கட்சிகளும் ஆதரவளித்து பிரதமரின் கையை வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## மீண்டும் தாக்கு

பீகிங், மே 4

வியட்னாம் சம்பந்தமாக அமெரிக்காவுக்கு ரஷ்யா ஒத்துழைப்புத் தருவதாக பீகிங் பத்திரிகை 'ரெட் பிளாக்' மீண்டும் கண்டனம் தெரிவித்திருக்கிறது. வாயளவில் ஏகாதிபத்திய [எதிர்ப்பு காட்டி]னாலும் ரஷ்யத்தலைவர்கள் உண்மையில் குருஷ்சேவின் [கொள்கையை இன்]னும் பின்பற்றிவருகிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சமூகசீர்திருத்தத்துக்கு நாடகக்கலை அவசியம்"

உடுப்பிட்டி, செவ்

"நாட்கக்கலை மனித உணர்வுகளை நேரடியாகத் தட்டியெழுப்பக் கூடியது. சினிமாப் பார்க்கும் போதுள்ள உணர்ச்சிகளுக்கும் அதே சினிமாவை நாடகமாகப் பார்த்து மகிழும் போது ஏற்படும் உணர்ச்சிகளுக்கும் வேறுபாடுகள் அனந்தம் உண்டு. பொது மக்களிடையே சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புவதற்கு நாடகம் சிறந்த கருவியாக அமைகிறது." என்று கரவெட்டி கிழக்கு பாரதி நாடகமன்றக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஆசிரியர் திரு. மு. செல்லத்தம்பி பேசுகையில் கூறினர்.

திரு. மகிந்தன் பேசுகையில் இலக்கிய வளர்ச்சிக்கு நாடகக்கலை இன்றியமையாததென்றும் சமூக சீர் திருத்தத்திற்கான நாடகங்களையே உருவாக்க வேண்டுமென்றும் கூறினர். மன்றத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. மு. செல்லத்தம்பி, தலைவர்: திரு. சி. தங்கராசா, உபதலைவர்: திரு. வ. முருகேசு, செயலாளர்: திரு. மு. இரத்தினம், உபசெயலாளர்: திரு: கா. ஞானநாயகம், பொருளாளர் திரு. சி. தியாகு, உபபொருளாளர்: திரு. வா. கணேசன்.


REGAL – JAFFNA
NOW SHOWING
Jack Palance
in
REVAK THE REBEL
(Technicolor)
Next Change:- TARAS BULBA


கூ. மொ. வி

## சில்லறைவியாபாரம் நடத்தாது

பம்பலப்பிட்டி, செவ்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இனிமேல் சில்லறை விற்பனவு நடக்காது. மொத்த விற்பனையைமட்டுமே கூ. மொ. வி. இனிமேற்கொள்ள விருக்கிறது.

கூ. மொ. விற்பனவு ஸ்தாபனம் பொருட்களை இறக்குமதி செய்து கூட்டுறவு பண்டகசாலைகள், சமாசங்கள், தனிப்பட்ட வியாபாரிகள் ஆகியோருக்கு மொத்த விற்பனைமட்டும் செய்ய அனுமதிக்கும் திட்டமொன்றை வர்த்தகமந்திரி டாக்டர் எம் வி. பி. பீரிஸ் தயாரிக்க விருக்கிறர்.

சில்லறை விற்பனவை கூ. மொ. வி. ஸ்தாபனம் நடத்துவதால் அதில் கடமையாற்றும் சில உத்தியோகஸ்தர்கள் மோசடிகளில் ஈடுபடுவதாகவும் இதை தவிர்க்க சில்லறை விற்பனவை நிறுத்துவதே உசிதமெனவும் மந்திரி கருதுகிறர்.


## தொழிற்சங்கங்கள்

குருணுகல, செவ்

"தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சியின் தலைமையில் இயங்கக்கூடாது என்பதைச் சகல தொழிலாளர்களும் வரவேற்கக் கூடியதென்று" என குருநாகல மாவட்ட தோட்டத் துரைமார் சங்கத் தலைவர் திரு ஏ. எச். கே. ஓமர் டெல்வெத்தையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"தொழிலாளர்களது முன்னேற்றத்தை பற்றி சிந்திப்பது அவர்களது குறிக்கோளல்லாது தாம் பதவியைப் பெறுவதே முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளார்கள்" என்றும் சொன்னர்.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (கீர்கொழும்பு)
லக்ஷ்மி (ரத்னபுரி) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)
விஜிதா (ஹட்டன்) தீவொலி (நுவரேலியா) ஜுப்பிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்


கம்போடியா

## அமெரிக்காவுடன் உறவை முறித்தது

நாம்பெங், மே 4

கம்போடியா அமெரிக்காவுடன் ரஷிய உறவை முறித்துக் கொண்டு விட்டதாக இளவரசர் சிகேனாக் விஷேச ஒலிபரப்பொன்றில் குறிப்பிட்டார். ஆனல் கான்சல் மட்டத்தில் இரு நாடுகளுக்குமிடையே உறவு இருக்கும் என அவர் கூறினர். தாய்லந்து அரசி பற்றி அமெரிக்க சஞ்சிகை ஒன்றில் வெளியான கட்டுரையும், கம்போடிய எல்லைக் கிராமங்களில் குண்டு வீசுவதும் இதற்குக் காரணம் என அறிவிக்கப் பட்டது.

கம்போடியாவின் முடிவு குறித்து அமெரிக்க ராஜங்க இலாகா வருத்தம் தெரிவித்தது.

## நூதனசாலை ஆலோசகர்கள்

யாழ்ப்பாணம். செவ்

யாழ்ப்பாணம் தேசிய நூதனசாலை ஆலோசனை சபைக்குக் கீழ்க்கண்டோர் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் மூன்று வருடங்களுக்கு அங்கத்தவர்களாகக் கடமையாற்றும்படி கல்வி-கலாசார மந்திரியினல் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அரசாங்கஅதிபர், யாழ்ப்பாணம்; உதவிகல்வி அதிகாரி யாழ்ப்பாணம்; வண. பண்டிதகமககித்திதேரோ யாழ்ப்பாணம்; வண. எஸ். ஏ. பங்கர் வட்டுக்கோட்டை; சேர் கந்தையா வைத்தியநாதன், திரு வி எம் எம் அபுசாலி யாழ்ப்பாணம்; திரு எஸ் யூ சோமசேகரம், திரு ஏ எம் புருடி யாழ்ப்பாணம்; திரு வி குமாரசுவாமி.

## மக்கள் வங்கிக்கிளை

பம்பலப்பிட்டி, செவ்

மே மாதம் 12-ம் திகதி மக்கள்வங்கிக் கிளையொன்றை நிதிமந்திரி திரு. யு பி வன்னிநாயக்கா திறைசேரிக் கட்டடத்திற்கு முன்னல் திறந்து வைப்பார்.

இன்னும் சில தினங்களுக்குள் மக்கள் வங்கிக்கிளைகள் வேறு இடங்களிலும் திறக்கப்படும் எனத் தெரியவருகிறது. கிராம மக்களுக்கு கடன் வசதிகள் முதலியன கொடுத்துதவுவதற்காகவே இக்கிளைகள் திறக்கப்படுகின்றன.

## மேதின சம்பவம் விசாரிக்க கமிஷன்

பம்பலப்பிட்டி, செவ்.

மேதினத்தன்று நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியை பிரதமர் பணித்துள்ளார். அன்றைய தினம் நடைபெற்ற துதிஷ்டவசமான சம்பவங்கள் மக்களுக்கும், அவர்கள் உடமைகளுக்கும் ஏற்பட்ட நஷ்டம், அன்றைய தினம் ஒழுங்கு செய்யப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பன குறித்து ஒருவர் கொண்ட இக்கமிஷன் விசாரணை செய்யும். வெள்ளவத்தை, காம்பல்பார்க், டார்லி வீதி, யூனியன் பிளேஸ் ஆகிய இடங்களில் நடைபெற்ற பொருள் சேதம், ஆட்சேதம் குறித்து விரிவாக விசாரணை நடத்தப்படும்.

## எம். பி.க்கு விருந்து

சுழிபுரம், செவ்

சுழிபுரம் கிராமசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு விருந்து வைபவம் ஒன்றை நடத்த ஒழுங்குகள் செய்யப்படுகிறது. இவ்விருந்து வைபவம் இம்மாதம் நடுப்பகுதியில் நடை பெறும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

# தொழிலாளர்கள் அரசாங்கத்தின் ஆதரவாளர்களாக இருக்கவேண்டும்

### இ. போ. ச. தொழிலாளர் மத்தியில் மாவட்ட நீதிபதி பேச்சு

பருத்தித்துறை, செவ்வாய்

"தொழிலாளர்கள் அரசாங்கத்துக்கு எப்போதும் ஆதரவு உடையவர்களாக இருக்க வேண்டும். மக்கள் தான் அரசாங்கத்தை உருவாக்குகிறர்கள், நாங்கள் மக்களின் சேவைக்காகவே அமர்த்தப்படுகிறேம். அவர்கள் தான் சம்பளம் தருகிறர்கள். அவர்களைத் திருப்திப்படுத்துவது அவசியமும். கீட்டாயமும் ஆகும்".

கடமையை நாம் சரியாகச் செய்து முடித்து உரிமைக்காக வாதிடுவது நியாயமாகும். வேலைநிறுத்தங்கள் வேண்டப்படாத ஒன்ருக இருந்தாலும் மக்கள் ஆதரவுடனும் அவர்களது நல்லெண்ணத்துடன் நடைபெறக்கூடிய வேலைநிறுத்தங்கள் வரவேற்கப்படலாம்"

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. எம். அப்துல்காதர் பருத்தித்துறை டிப்போவில் நடைபெற்ற வருடாந்தக் கொண்டாட்ட விழாவிற்கு தலைமை வகித்துப் பேசியபோது கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "தொழிலாளர்கள் பொதுமக்களுடன் அன்புடனும் ஆதரவுடனும் நடந்து கொள்வது விரும்பத்தக்கது. கடந்த காலத்தைவிட படித்தவர்களே இன்று அதிகமாகத் தொழிலாளர்களாக இடம் பெறுவதால் தொழிலாளர்களுக்கு முன்னையவிட மதிப்பும் உயர்வும் ஏற்படும். நம்மை நாமே தீய பழக்க வழக்கங்களுக்கு ஆளாக விடாது பாதுகாத்துக்கொண்டால் தொழிலாளர் சமூகம் நல்ல முன்னேற்றத்தைக் காண முடியும்" என்ருர்.

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் உரையாற்றுகையில் விழவையொட்டி நடைபெற்ற விளையாட்டுக்களைப் பாராட்டியதுடன் மக்களிடையே இன்று தேசிய உணர்ச்சிவளர்ந்துவரும் இந்த நேரத்தில் நமது பண்புக்கும் பழக்க வழக்கங்கட்கும் உடல் வலிவுக்கும ஏற்ற தேசிய விளையாட்டுக்கள் இது போன்ற வைபவங்களில் அதிகமாக இடம் பெறச் செய்ய வேண்டியது அவசியமாகும் என்ருர்.

"விளையாட்டுக்களில் வெற்றியீட்டியவர்கள்மட்டு மல்லாது தோல்யடைந்தவர்களும் தமது கடமையைச் சரிவரச் செய்தோம் என்ற திருப்தியுடன் மகிழ்ச்சியடைய வேண்டும். இத்தகைய பண்பு விளையாட்டுத்துறையில் மட்டுமல்ல வாழ்வின் பல்வேறு துறையிலும் நம்மை வழிநடத்தினல் அது பெரும் பேருகும், இ. போ. ச. தொழிலாளர்கள் இடையே பல்வேறு விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல சிறந்த நடிகர்கள், மல்யுத்த வீரர்கள் கூட இருப்பதைக் காண நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்றும் குறிப்பிட்டார்.

வட்பிராந்திய இ. போ. ச. அதிகாரி திரு. ஜீ. எவ். சான் உதவி அதிகாரி திரு. வி நடராசா, பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், நகரசபைத் தலைவர் திரு. ந. நடராசா காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னல்ட் முதலான பல பிரமுகர்களும் கலந்து கொண்ட இவ்விழாவில் பிராந்திய இ. போ. ச. உதவிஅதிகாரியின் பாரியார் திருமதி வி. நடராசா விளையாட்டுக்களில் வெற்றியீட்டிய வீரர்கட்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

## ஸ்ரீ சங்கர ஜெயந்தி

பம்பலப்பிட்டி, செவ்வாய்

சங்கர அடிகளின் ஸ்ரீராம ஜெயம் சபாவினல் மே மாதம் 7-ந் திகதி கொண்டாடப்படும். அன்று விசேட பூசையும், பக்திப்பாடல்களும் இடம்பெறும்.

## யாழ்ப்பாணத்தில் வேலைவாய்ப்பு

### உபசபை நியமனம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் வேலையில்லாப் பிரச்னையையும், பல்வேறு பிரிவுகளில் தேர்ச்சி பெற்ற வாலிபர்கள் தகைமையை எவ்வாறு உபயோகப்படுத்தலாம் என்பதை தெளிவுபடுத்துவதற்கும், திடமான திட்டமொன்றை தயாரிப்பதற்காகவும் மாவட்ட இணைப்புக் கமிட்டி சென்றகூட்டத்தில் ஒரு உப-சபையை நியமிக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த உபசபையில் யாழ் அரசாங்க அதிபரும், கூட்டுறவு உதவி ஆணையாளரும் மாவட்ட கமத்தொழில் அதிகாரியும், யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக்கல்லூரி அதிபரும் அங்கம் வகிப்பார்களெனத் தெரியவருகிறது.

## வாக்காளர் மகஜர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாநகரசபை 10-ம் வட்டாரத்தின் ஒரு பகுதியான வண்மேற்கு பத்திரகாளி கோவில் வண்ணுங்குளம் வீதி, பெரிய தம்பிரான் வீதி, லேட்டஸ் வீதி ஆகியன நீண்டகாலமாக பலவழியாலும் பின்தங்கியிருக்கின்றதென்றும் குறிப்பிட்ட அளவிற்கு மறுவட்டாரங்கள்போல் கவனிக்கப்படவில்லையென்றும் கூறும் கருத்துக்களை அடிப்படையாயக் கொண்ட மகஜர் ஒன்றை 10-ம் வட்டார வாக்காளர்கள் யாழ். மாநகரசபை முதல்வருக்கும், ஸ்தலஸ்தாபன மந்திரிக்கும் அனுப்பியுள்ளார்கள்.

## நெல்லியடிக்கு இரண்டுதட்டு பஸ்

பருத்தித்துறை, செவ்

பருத்தித்துறை — யாழ்ப்பாணம் ரஸ்தாவில் நெல்லியடிக்கூடாக விரைவில் இரட்டைத்தட்டு பஸ் போக்குவரத்துச்சேவையில் ஈடுபடவிருப்பதாகத் தெரியவருகிறது.

இதுசம்பந்தமாக உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் தொடர்புடைய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியதுடன் இச்சேவைக்குஇடையூறுக மாலிசந்தையில் உள்ள தினகரி உடையார் தெருமுடி மடத்தை சுமார் மூன்றடிக்கு மேலாக உயர்த்துவதற்கான ஏற்பாடுகளையும்உரிமையாளர்களுடன் கலந்து நிறைவேற்றுவதிலும் தீவிர முயற்சிகளை எடுத்துவருகிருர். பெரும்பாலும் இச்சேவை மேமாத இறுதியில் ஆரம்பமாகலாம் என நம்பப்படுகிறது.

## சாரணச் சிறுவனின் தீரச் செயல்

சிலாபம், செவ்.

நீராடச் சென்று ஆற்று நீருக்குள் மூழ்கி வெளியேற வழியில்லாமல் மூச்சுத் திணறித் தத்தளித்துக் கொண்டிருந்த ஆசிரியை ஒருவரை கொலிதா ராஜபக்சா என்ற 16-வயது சாரணன் காப்பாற்றிய சம்பவம் தெதுரு ஓயாவில் இடம் பெற்றது.

எங்கோ சென்று கொண்டிருந்த கொலிதா கதறல் சத்தம் கேட்டு ஆற்றுப் பக்கம் வந்தபோது நீருக்குள் ஆசிரியை தத்தளிப்பதைக் கண்டு ஆற்றுக்குள் குதித்து சாதுரியமாக ஆசிரியையின் தலைமயிரில் பிடித்து நீருக்குள்ளிருந்து வெளியே அவரை இழுத்துக் காப்பாற்றினராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர்கள் தேசிய அடிப்படையில் ஒன்றுசேர வேண்டும்

## எழுத்தாளர் சங்கத்தில் கவிஞர் நீலாவணன் பேச்சு

திருக்கோணமலை, செவ்

"தமிழ் வளர்க்கும் பொது நோக்கம் கொண்டே எழுத்தாளர்கள் எழுதுகிறார்களென்று சொல்லிக்கொள்ளப்படுகிறது. இந்த நல்ல நோக்கத்திற்காகவே எழுத்தாளர் சங்கங்கள் நாளினும் பொழுதினும் தோன்றி வருகின்றன. அவ்வாறுயின் இன்று நாட்டிலே எழுத்தாளர் மத்தியிலே பெருகிவரும் கோஷ்டிப்பூசல்கள் எப்படி உருவாக்கப்படுகின்றன? எழுத்தாளர்கள் மத்தியில் ஏன் குரோதமனப்பான்மை தோன்றவேண்டும்? சுயநலமும் பிற்போக்குக் கொள்கைகளும் வளர்வதற்காகத்தான் எழுத்தாளர் சங்கம் கூடுகின்றார்களென்றால் அதனால் என்ன பயன்? நோக்கம் ஒன்றுதான்! போக்குகள் பல தோன்றுவானேன்? இப்படியெல்லாம் சாதாரண வாசகர்கள் எழுத்தாளர்களைப் பார்த்துக்கேட்கிறார்கள். எழுத்தாளர்களின் லட்சியத்தில் மக்களுக்கு நம்பிக்கை [illegible]ம் போது எழுத்தாளர்கள் எதைத்தான் சாதித்துவிடப்போகிறார்கள். ஆகவே தேசிய அடிப்படையில் எழுத்தாளர்கள் ஒரே அணியில் கூடி உழைக்கும் காலம் விரைவில் தோன்றவேண்டும்" என்று திருக்கோணமலையில் தமிழ் எழுத்தாளர் சங்க புனருத்தாரண விழாவுக்கு தலைமை வகித்துப்பேசுகையில் திரு. நீலாவணன் குறிப்பிட்டார்.

'இளம் எழுத்தாளர் புதுமையை விரும்பும் அதே நேரத்தில் இலக்கிய மரபினையும் மறந்துவிடலாகாது பழமையின் அடிப்படையில் தோன்றும் புதுமைகள் தான் வரவேற்கத்தக்கன. திருக்கோணமலை தமிழுக்குத் தொண்டாற்றும் பல அறிஞர்களை அளித்துள்ளது' என்று முன்னாள் மாவட்ட வித்தியாதரிசி திரு. மா. பீதாம்பரம் பேசுகையில் தெரிவித்தார்.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்கள்- திரு; மா. பீதாம்பரம், திரு. க. ம. மாணிக்கராஜா, டாக்டர் செ. சித்திரவேலு, டாக்டர் சி. சிவானந்தன், திரு. அ. அழகக்கோன். தலைவர்- புலவர் செ. பொ. சிவசேகரம், உப தலைவர்- திரு. இ. சுப்பிரமணியம். காரியதரிசி- புலவர் சி. வி. சோமாஸ்கந்தர். பொருளாளர்- புலவர் வி. சி. சோமாஸ்கந்தர். உப செயலாளர்- தா. பி. சுப்பிரமணியம்.

இப்புனருத்தாரண விழாவில் புலவர் மா. பார்வதிநாதசிவம், சொற்பொழிவாற்றினர். பண்டித வித்வான் திரு வி. சி. கந்தையா வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### புதன் 5-5-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00.)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மெல்லிசை, 7-45 தேர்ந்தஇசை, 8 15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இலங்கை ஒலிப்பதிவுகள், 5-45 திரைப் படஇசை.

இரவு 5-15 கிராமசஞ்சிகை, 6-45 பாட்டு — எம். வர்ண குலசிங்கம், 7-45 பேச்சு — 'எங்கள் முறைகள்' — டாக்டர் சி.குணரத்தினம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தாளவாத்தியக் கச்சேரி, 9-30 நேயர்விருப்பம், 10-00 தேர்ந்தஇசை.

## இரட்டைத்தட்டு பஸ் விவகாரம்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

இ. போ. ச. நிர்வாகிகள் தங்கள் முதற் கூட்டத்திலேயே 800 இரட்டைத்தட்டு பஸ் வண்டிகளை லண்டன் டிரான்ஸ்போர்ட் சபையிலிருந்து வாங்கவேண்டுமென்ற விஷயத்தை பின்போட்டுள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

இந்த பஸ்கள் கொழும்பிற்கு வந்ததும் உடனடியாக உபயோகிக்கலாம் என்பதனாலும் விலை குறைந்ததென்ற காரணத்தாலும் இவைகளை வாங்கலாம் என்று இ. போ. ச. முந்திய நிர்வாகத்தினர் ஏற்கனவே அபிப்பிராயப்பட்டிருந்தனர்.

---

## தொடர் கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரர் தேவஸ்தான மண்டபத்தில் மேற்படி பஞ்சரதத் திருப்பணியை முன்னிட்டு சென்ற வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பெரும்பகுதிக் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் தலைமையில் வண்ணை முத்தமிழ்மணி ஸ்ரீமத் சி.எஸ். எல். மணிபாகவதரின் சம்பூர்ண மகாபாரத கதாப்பிரசங்கம் ஆரம்பமாகியது:

மேற்படி பிரசங்கத்தொடர் வெள்ளிக்கிழமை தோறுமில்லாமல் இடையேயுள்ள விசேஷ தினங்களிலும் மாலை 6 மணிமுதல் நடைபெறுமென டாக்டர் செ. சிவஞானசுந்தரம் தெரிவித்தார்.

---

## "மனிதனும் மாறவேண்டும்"

உடுப்பிட்டி, செவ்வாய்

"சாதி, மத வித்தியாசமின்றி மனிதர்கள் ஓர் கட்டுக்கோப்பான அமைப்பில்வாழமுயற்சிக்கும்பொழுது தான் முன்னேற்றப் பாதையை நோக்கிப் பயணம் செய்ய ஆரம்பிக்கிறார்களென்று அர்த்தமாகிறது. நாகரீகம், அதன் வளர்ச்சி மாற்றத்தோடொட்டி மனிதனும் மாறவேண்டும். மற்றவர்களைப் போல நாமும் முன்னேற வேண்டும். மூடநம்பிக்கைகளுக்கும் மூட பழக்கவழக்கங்களுக்கும் சாவு மாணி அடிக்கவேண்டும், அப்போதுதான் மனிதர் மத்தியில் சாதி என்கின்ற தொற்றுநோய் அகல வழி பிறக்கும்" என்று அகில இலங்கை வேலை வேண்டுவோர் கழகத் தலைவர் திரு. கே. ரி. இராசசிங்கம் ஒட்டக்கரை ஐக்கிய வாலிபர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

---

## வெற்றி தோல்வி இல்லை

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் ஞூட்டின் ஸ்ரார் கோஷடிட்கும் சண்டிலிப்பாய் விளையாட்டுக் கோஷ்டிக்கும் சிநேகபூர்வமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது: இப்போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

---

## தொழில்புரிய அனுமதிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், செவ்.

வயாவிளான்-பலாலி தெற்கு கௌவுன்சிலையக்கூட்டம் திரு. இ. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது: இக்கிலையத்தில் தொழில் [illegible] தொழில் பழகவும் [illegible] களை அனுமதிப்பதென முடிவு செய்யப்பட்டது.

## ஆறுகிரகங்களின் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 36 பாகைகளையும் சப்தரிஷிகள் கடப்பதற்கு 2800 வருடங்கள் செல்லும் கிராந்தி விருத்தம் 360 பாகைகளையும் சப்தரிஷிகள் 2800 வருடங்களில் கடந்து செல்வர் இப்படியாக சப்தரிஷிகள் நிலை மாறுங்காலம் பத்தும புராணத்தில் தச அவதாரமாய்க் கூறப்பட்டு, ஒவ்வொரு அவதார காலத்திலும் புதிய கொள்கையுடைய ஒருவரின் தோற்றத்தால் உலகநிலை மாற்றம் அடைகிறது.

கந்தபுராணம்கூறும் துருவ சக்கர வரலாறும் சப்தரிஷிகள் கார்த்திகை நட்சத்திரத்தில் நின்ற காலத்தைக் குறிக்கும்

சூரியனிலும் பார்க்கப் பன்மடங்கு பெரியது கார்த்திகை நட்சத்திரம். இந்த நட்சத்திரம் கோடி சூரியப் பிரகாசம் உடையதாயும், சிவசக்தியாகிய முருகனின் இருப்பிடமாயும், அவர் அதில் நின்று அண்ட கோடிகளையும் துருவ சக்கரத்தால் ஆட்டி வைப்பவராகவும் புராணம் கூறும்.

இக் கூற்றிலும் பாற்கடல் (Milky Way) என்னும் கடலைக் கடைந்த பூர்வ சரித்திரத்திலும் மிக நுட்பமான வான சோதிடஞானம் உண்டு அதை இங்கு விரிக்கிற் பெருகும்.

அயன சலனத்தைக் கொண்டும் சூரிய, சந்திர, கிரகணங்களைக் கொண்டும், அவற்றால் பாதிக்கப்படும் ராசி, நட்சத்திரம், கிரகணங்களைக் கொண்டும் உலக யுத்தங்களும், சாம்ராச்சியங்களின் தோற்றம், அழிவு, பூகம்பம், புயல், கொள்ளைநோய் போன்ற கெடுதல்களும், மகான்களின் பிறப்பு, அவர்கள் உலகிற்குப் போதிக்கும் கொள்கைகள், எல்லாம் கூறப்படுகின்றது.

எழுபத்திரண்டு வருடங்களுக்கு ஒருகலைவீதம் அயனம் சலிக்கும் இரண்டு கலைகள் கொண்ட 144 வருடகாலம் ஒருமனுவெனக் கணக்கிடப்படுகிறது.

தோன்றி வளரும் ஓர் சாம்ராச்சியத்தின் உச்சநிலை 144 வருடங்கள்தான் நீடிக்குமென நாடிநூல் கூறும். போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் உயர் நிலையில் இருந்தும் இப்படியான கணித முறைப்படிதான் என்பதை சரித்திர நூல் அறிவிக்கிறது.

தனித்தனி மனிதர்களின் பலன்களைக் கூறுவதற்கு முப்பது பாகைகள் கொண்ட ஓர் இராசியை 800 கூறிட்டு ஒவ்வொரு கூற்றுக்கும் சில அம்ச பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த அம்சப்படி ஒவ்வொரு 24 செக்கண்டுக்கும் ஒரு பிள்ளை பிறக்கும். ஒன்று போல் மற்றது இருக்காது. பிறக்கும் பிள்ளைகளின் கைகளிலிருந்து இந்த அம்சமறிய சில முறைகளை கையாண்டிருக்கிறார்கள்.

இந்த 24 செக்கன்ட் நேரத்தை எடுத்து இதுசரிதானுவென்று அறியும்முறை ரிஷிகள் சரநூலில் கூறியுள்ளனர்:

நாள் ஒன்றிற்கு ஒருவர் 21,600 தடவை சுவாசம் விடுவர். இச் சுவாசம் ஐந்து பிரிவாக்கப்பட்டு பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமெனப் பெயரிடப்பட்டுள்ளது. பஞ்ச பட்சி ஆருடவிதியும் இதுவே.

பிள்ளைகள் பிறந்தவுடன் என்ன நாடி ஓடுவதென்று பார்த்து அதற்குக் கூறிய எந்தப் பூதியத்தின் காலத்தில் அப்படிப் பிள்ளை பிறக்குமென சரநூலால் அறியலாம்.

இது விஷயத்தையும் விரிக்கிற் பெருகும். இப்படியே கோடிக்கணக்கான பாடல்களால் சோதிட சாஸ்திரம் கூறப்பட்டுள்ளது. அதை முழுதும் வாசித்து அறிய ஒருவர் சீவிய காலம் போதாது.

கிறீஸ்துவிற்கு 1500 வருடத்திற்கு முன் சீவித்த காக்கை [illegible] 98 பாக்களால் ராகுவால் ஏற்படும் பலவித சூரிய கிர

## சங்கங்களில் சீர்கேடு

பம்பலப்பிட்டி, செவ்

அரசாங்க உத்தியோகத்தர்களால் நடாத்தப்படும் அரசாங்க ஊழியர் சங்கங்கள் சில சீர்கேடானமுறையில் நடாத்தப்பட்டுவருவதால் அவைகளை எடுத்து நல்லமுறையில் அமைப்பதற்கான நகல் திட்டங்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றனவெனத் தெரிய வருகிறது. அரசாங்க உத்தியோகத்தரின் நலவுரிமைக்காக இயங்கிவரும் இச்சங்கங்களில் சிலர் பணத்தைத் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் புகார்செய்யப்பட்டுள்ளது.

புதிதாகத் தயாரிக்கப்படவிருக்கும் சட்டத்தில் சீர்கேடான முறையில் இயங்கிவரும் சங்கங்களைப் பொறுப்பேற்று நடாத்துவதற்குத் தேவைக்கள அதிகாரிக்கு அதிகாரம் வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது.

---

## முன்னேற்பாடாக நடந்துகொள்க

பம்பலப்பிட்டி, செவ்வாய்

மழை அடிக்கடி பெய்துவருவதால் புகையிரதம் செல்லும் பாதைகளைக் கவனமாக மேற்பார்வைசெய்யும்படி அவ்வப் பகுதிப் பொறியியலாளர்களுக்கு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

மண்சரிவுகளால் புகையிரதம் செல்லும் பாதைகளில் தடைகள் ஏற்படாவண்ணம் தினமும் பாதைகளை நோக்கு புரியும்படியும் சகல புகையிரத நிலையங்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளதாக ஒரு புகையிரதப்பகுதி அதிகாரி தெரிவித்துள்ளார்.

---

கணத்தைப் பற்றியும், தோஷ நிவர்த்திக்காய், செய்ய வேண்டியவை என்ன என்பதையும் கூறியுள்ளார்.

30-5-65-ல் ஏற்படவிருக்கும் சூரிய கிரகணம் இலங்கையில் தோற்றாத போதிலும் அதனால் ஏற்படும் உலக கெடுதி எங்களையும் பாதிக்கத்தான் செய்யும். அஷ்டகிரக யோகம்வந்த காலந்தொட்டு உலகிலும் இலங்கையிலும் சமாதானம் இல்லையென்பது மறுக்க முடியாத உண்மை.

இம்முறை ஏற்படப்போகும் ஆறு கிரகயோகமும் உலகிற்கு நன்மை பயக்காது. சுபக்கிரகங்கள் அஸ்தமிப்புடன் சண்டான யோகமும் கிரகண ராசிக்கு கேந்திரங்களில் பிருதுவி, அப்பு, அக்கினி, ஆகாச இராசிகளில் கொடிய பாவர் நின்று ஒருவரை ஒருவர் எதிர்த்துப் பார்ப்பதால் பெரியோர்க்கு ஈனரால், குடிவெறியரால் கஷ்டமும், உலகில் விஷத்தால், அக்கினியால், ஆயுதத்தால் பீடையும் பிரதானமாய் இடபராசி அமெரிக்காவைக் குறிப்பதால் அங்கு இருப்பவர்களுக்கு மனநிம்மதிக் குறைவோடு பல கஷ்டங்களும் ஏற்படும்.

கிரகண காலத்தில் செய்யப்படும் தர்மத்திற்கும், அக் காலம் தேவுக்களுக்கும் பிதிர்களுக்கும் செய்யப்படும் சிராத்தங்களுக்கும், அந்நேரம் ஓதப்படும் மந்திரங்களுக்கும், அதிகபலன் கிட்டுமென்றும், அந்நேரம் புண்ணிய தீர்த்தம் ஆடினால் சர்வ பாவங்களும் நீங்குமென்றும் சிமிர்தியிலும் புராணங்களிலும் கூறப்படுவதாய்ச் சித்தாந்த சிரோன்மணியில் கூறப்பட்டுள்ளது.

இப்படியான நேரத்தில் பலராமரும் ஸ்ரீகிருஷ்ணரும்துவாரகையில் இருந்தபோது தங்கள் பாவத்தை நீக்க சியமந்த பஞ்சக என்னும் புண்ணியஸ்தலம் போய் தீர்த்தமாடியதாய் ஸ்ரீமத் பகவதம் பத்தாம் கண்டத்தில் கூறப்பட்டுள்ளது.

நாமும் 30-5-65-ல் ஓர் புண்ணிய ஸ்தலம் சென்று அங்குள்ள தீர்த்தமாடி எங்கள் பாவம் நீங்கவும் ஆறு கிரக சேர்க்கை யோகத்தால் உல


## வரி விளம்பரம்

### தேவை

4 வருட அனுபவமுள்ள சினிமா ஒப்பரேற்றர் தேவை. 35 வயதுக்குட்பட்டவரும் 250/- ரூபாய் பிணைப்பணம் கட்டக்கூடிய விண்ணப்பகாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிமையாளர், ஸ்ரீ பாஸ்கரன் தியேட்டர், அச்சுவேலி. 228

### விற்பனைக்கு

காலு பரப்பு விஸ்தீரணமுள்ள காணி, நிக்கலஸ் ஒழுங்கையிலிருக்கும் பாரதி வீதியில் விற்பனைக்குண்டு விபரத்திற்கு 316, காவலர் வீதியிலுள்ளவர்களை விசாரணைசெய்யவும். 229

### வகுப்புகள்

மத்திய எழுதுவினைஞர் - அப்போதிக்கரி புகுமுக பரீட்சைகளுக்கு ஆர்வமிகுந்த மீட்டல் வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யூனைட்டட் இன்ஸ்டிரியூற்ஸ், செல்லியடி, கரவெட்டி, 107, பருத்தித்துறை ரோட், நல்லூர், யாழ்ப்பாணம். 203

### தேவை

முதலாம் நம்பர் அல்லர் ஒன்றும், 16 குதிரைப் பவர் பொருந்திய மோட்டர் ஒன்றும் தேவை. ஆர். பி என் மில்ஸ், கண்டிரோட், சாவகச்சேரி. 230

### வாடகைக்கு

புல்டோசர்: எமது டோசர் தற்போது கண்டாவளை, முரசுமோட்டை, பரந்தன் பகுதிகளில் வேலைசெய்கின்றது. தேவையுள்ளோர் விண்ணப்பிக்கவும்: விவேகானந்தன், வெலிக்கண்டல், கண்டாவளை அல்லது வல்வெட்டித்துறை. 232

### காணவில்லை

யாழ்ப்பாணக்கச்சேரியிலோ, அல்லது கச்சேரியடியிலோ, அல்லது பொலிஸ் ஸ்ரேசனிலோ நான்கு வழக்குகள் சம்பந்தமான தஸ்தாவேசுகள் அடங்கிய இரண்டு கடதாசிப் பைகள் 17-4-65-ல் தவறிவிட்டன. அப்பைகளில் பெயர்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும். அல்பிரட் சுவாம்பிள்ளை, புரக்ரர், 4-ம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். 234


## மரண அறிவித்தல்

காரைநகர் வாசியும், பெருமாக்கடவை ஸ்கூல் இன்ஸ்பெக்டர் J. T. சதாசிவ ஐயரின் மருமகனும், தேவராசசர்மா, ஜகந்நாதசர்மா, பரமேஸ்வரி, ஜோதிஸ்மதி இவர்களின் தகப்பனும், தியாகராஜக்குருக்கள், தெண்டாயுதபாணி இவர்களின் மாமனும், பஞ்சாட்சர ஐயர், ராமசாமி ஐயர், சுந்தரஐயர், ரத்தின அம்மா, சௌந்தரஅம்மா இவர்களின் சகோதரரும் சண்முகஐயரின் மகனுமாகிய பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர் சென்ற புதன்கிழமை இரவு 10-30 மணியளவில் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னாரது பூதவுடல் இணுவில் காரைக்கால் மயானத்தில் அடுத்தநாள் தகனக்கிரியைகள் முறைப்படி நடைபெற்றன. வரும் வெள்ளிக்கிழமை 7-5-65 காலை 10 மணியளவில் நடக்கும் தௌதகக்கிரியைகளுக்கு உற்றார் உறவினர் எல்லாரும் வந்து பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம். இங்ஙனம்,

பா. தேவராஜசர்மா,
பா. ஜெகந்நாதசர்மா. 235

கிற்கு ஏற்படும் கஷ்டம் எங்களைப் பிடிக்காமலும் பரமேஸ்வரனை வேண்டி, கிற்போமாக.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். பிரதம காரியாதிகாரி உதவி அரசாங்க அதிபராக நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாண மாவட்ட பிரதம காரியாதிகாரியாகக் கடமையாற்றிய திரு. டி. பாலச்சந்திரன் புத்தளம் உதவி அரசாங்க ஏஜெண்டாகப் பதவி ஏற்கும் பொருட்டு காலை புறப்படுகிறார்.

திரு. பாலச்சந்திரன் தலைமைக் காரியாலய காரியாதிகாரி (டி. ஆர். ஓ) யாகவும், மாவட்ட இணைப்புக் கமிட்டி, மாவட்ட விவசாயக் கமிட்டி ஆகியவற்றின் காரியதரிசியாகவும், மாவட்ட வீதிப்போக்குவரத்து அதிகாரியாகவும் இங்கு கடமையாற்றினர்.

வை எம். சி. ஏ. டைரக்டர் சபை அங்கத்தினராகவும் சிலவருடங்களாக யாழ்ப்பாணம் க்ஷயரோக தடுப்புசங்க காரியாதிகாரியாகவும், அதன் உபதலைவராகவும் கடமையாற்றினர்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த பல பிரச்னைகள் அவர காரியாதிகாரியாக இருந்த போது மேற்கொள்ளப்பட்டன. அவரது முயற்சியின் பேரில் யாழ்ப்பாணம் நீர்த்தேக்கம்பற்றி அரசாங்கம் இப்போது ஆராய்ச்சி மேற்கொண்டுவருகிறது.

விவசாயத்துறையில் அவர் அதிகசிரத்தையெடுத்துக்கொண்டதன் மூலம் பனைநடுகை திராட்சைக் கொடி நடுகை முதலியன இங்கு மேற்கொள்ளப்பட்டன. சமூக கலாச்சார நடவடிக்கைகளில் அதிக சிரத்தைகொண்டாரென்பதும் குறிப்பிடத்தக்கது.

வடபிரதேச

# ஆசிரியர் இடமாற்றம் நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்
அடுத்த மாதம் தொடக்கம் 300 உதவி ஆசிரியர்களையும் தலைமையாசிரியர்களையும் வடபிரதேசத்திலிருந்து மாற்ற கல்வி இலாகாவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை எதிர்த்து வடபிரதேச ஆசிரிய சங்கமும் அகில இலங்கை ஆசிரியர் சங்கமும் (அரசினர்) புதிய இடமாற்றத் தலைவர் திரு. குலதுங்கா, உதவி வித்தியாதிபதி ஆகியோரைப் பேட்டி கண்டதைத் தொடர்ந்து திரு. குலதுங்கா வடபிரதேசத்தில் உள்ள ஆசிரியர்களை மாற்ற வேண்டாம் என உத்தரவு பிறப்பித்துள்ளார். வடபிரதேசத்திலிருந்து ஆசிரியர்கள் எவரையும் அவர்கள் விருப்பமின்றி மாற்றி ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் கஷ்டம் ஏற்படுத்த வேண்டாமென்றும் அவர் தமக்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு வற்புறுத்தியுள்ளதாக அறியப்படுகிறது. வடபிரதேசத்திலுள்ள காலியான இடங்களைப் பற்றிய விபரங்களைத் திரட்டுமாறு அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தூதுக்கோஷ்டியில் வடபிரதேச ஆசிரியர் சங்கப்பொதுக் காரியதரிசி திரு. கா. க. காசிப்பிள்ளை அகில இலங்கை ஆசிரியர் சங்கப் (அரசினர்) பொதுக்காரியதரிசி செல்வி தை. சிவசுப்பிரமணியம், உதவி பொதுக்காரியதரிசி திரு. ஈ. சி. குணசேகரா ஆகியோர் அங்கம்வகித்தனர்.

ஆசிரியருக்கு இடையூறு நிகழாத முறையிலும் பிள்ளைகளின் கல்வியைப் பாதிக்காத முறையிலும் இடமாற்றம் நடைபெற வேண்டுமென தூதுகோஷ்டியினர் எடுத்துக்கூறி வருடமத்தியில் செய்யப்படும் இப்படியான மாற்றங்கள் அறவே ஒழிக்கப்படவேண்டுமெனவும் வற்புறுத்தியதாக அறியப்படுகிறது.

சில கல்வி அதிகாரிகளும் ஆசிரிய சங்கங்களும் ஆசிரியர் இடமாற்றப் பிரச்னையைத் தங்கள் சொந்த நன்மையைக் கருதிஸ்திரந்தரமாகவைத்திருக்க விரும்புகிறார்கள் என்று மேற்படி தூதுக்கோஷ்டியினர் சுட்டிக்காட்டி ஆசிரியர் இடமாற்றப் பிரச்னை இனிமேல் எழாதவாறு முடிவுகட்டப்படவேண்டுமெனவும் இடமாற்றத்தலைவரைக் கேட்டுக்கொண்டதாக அறியப்படுகிறது. கல்வி மந்திரியின் வேண்டுகோளின்படி தூதுக்கோஷ்டியின் ஒரு விரிவான மகஜரைத் திரு. குலதுங்காவிடம் சமர்ப்பித்தனர்.

## பதவிஉயர்வுடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், செவ்.
வட்டுக்கச்சி தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் பதில்தலைமையாசிரியராக கடமையாற்றிய திரு. ஆ. அருணம்பலம் இம்மாதம் முதல்திகதி தொடக்கம் பிபிலை அரசினர் தமிழ்பாடசாலைக்கு தலைமையாசிரியராக பதவி உயர்வுடன் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

## பிச்சையாபிள்ளைக்கு 2 ஆண்டுகடுங்காவல்

மதுரை, மே. 3
மதுரை சரஸ்வதி உயர்நிலை பள்ளி நிர்வாக அதிகாரி திரு. பிச்சையாபிள்ளைக்கு 2 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இது தவிர 100 ரூபாய் அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் ஒருவார சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

மதுரையில் சரஸ்வதிபள்ளி சென்ற ஆண்டு 35 மாணவிகளும், 1 ஸதிரீயும் மாண்டனர். 128 பேர் காயமடைந்தனர்.

## பாராட்டும் வரவேற்பும்

சாவகச்சேரி, திங்கள்
சாவகச்சேரி கிராமச்சங்கத்தின மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. சுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்றபொழுது ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்திற்குப் பாராட்டுத் தெரிவித்துதீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், சாவகச்சேரித் தொகுதி பாராளுமன்ற பிரதிநிதி திரு. வ. ந. நவரத்தினத்துக்கு சங்கத்தின் சார்பில் ஒரு வரவேற்பளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

காலி, செவ்வாய்
இடதுசாரிகள் தொழிலாளர்களை ஏமாற்றிவிட்டார்கள். சமசமாஜ மந்திரிகள் தொழிலாளர்களின் 21 கோரிக்கையில் ஒன்றையாவது கொடுக்கவில்லை. இந்தக் கோரிக்கைகள் தேசிய அரசாங்கத்திடமும் சமர்ப்பித்தால அவற்றில் பெரும்பாலனவற்றை கொடுப்பதற்கு தேசிய அரசாங்கம் ஆயத்தமாகவுள்ளது என்று உள்நாட்டு மந்திரி டாக்டர் தகநாயக்கா தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரம் ஒன்றுக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் தெரிவித்தார். தேசிய அரசாங்கம்தொழிலாளர் நலன் கருதிதொண்டாற்றும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பேராசிரியர் கைது

மதுரை, மே. 3
மதுரை தியாகராஜர் கல்லூரி பேராசிரியர் திரு. எஸ. இலக்குவனர் பாரத பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

## நன்றி

சாவகச்சேரி, திங்கள்
கருப்பநீர் தடைசம்பந்தமாக சாவகச்சேரி எம் பி திரு வ ந நவரத்தினம், உடுப்பிட்டி எம் பி திரு மு சிவசிதம்பரம், பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம் ஆகியோர் உள்நாட்டமைச்சா திரு டபிள்யு தகநாயக்காவைப் பேட்டி கண்டு சீவல் தொழிலாளர்களுக்கு இத்தடையால் ஏற்பட்டுள்ள சிரமங்கள் பற்றி எடுத்துக்கூறியமைக்கு நன்றி தெரிவித்து தென்மராட்சி மக்கள் முன்னேற்ற மன்ற செயலாளர் திரு க நடராசா கடிதம் எழுதியுள்ளார்.

## யாருடையபேனை?

யாழ்ப்பாணம், செவ்
சிறிதுநேரம் எழுதுவதற்கு இரவல் கொடுத்த பாக்கர் பேனையை அதன் உரிமையாளர் திருப்பிப் பெற்றுச்செல்ல மறந்துவிட்டதாகவும் அவரைப்பற்றிய தகவல் தெரியாததால் உரியவரிடம் பேனையைச் சேர்த்துவிடுமாறும் தெரிவித்து இருவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் அதை ஒப்படைத்துச் சென்றுள்ளனர். பேனைச் சொந்தக்காரர் தகுந்த அத்தாட்சி காட்டி 'ஈழநாடு' காரியாலயத்தில் அதைப்பெற்றுக் கொள்ளலாம்.

## நாட்டிலும் . . .

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

மேம்படுத்திக் கொள்வதற்காகவும் பொழுது போக்கிற்காகவும் குடும்பக் கட்டுப்பாடு ஸதாபனங்களை உண்டாக்கி அரைகுறையாகப் பிரசாரம் நடாத்தி வருகிறார்கள். வெள்ளம் கழுத்துக்கு மேல் ஏறுவதற்கு முன்பு அரசாங்கமே இந்த முக்கியமான வேலையைப் பொறுப்பேற்று நடாத்தவேண்டும் இல்லாவிட்டால் அரிசிக்கு என்ன செய்வது என்ற தலையிடி நித்திய கண்டமாய்விடும்.

* * *

சென்ற சனிக்கிழமை காலமான சங்கீத வித்வான் ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமணியம் பி. ஏ. (ஆனர்ஸ) படித்துப் பட்டம் பெற்றவர்களும் சங்கீதத் தொழிலை மேற்கொள்ளலாம் என்று வழிகாட்டியவர்களில் ஒருவர். முன்னணி பாடகர் 'செற்'றில் முடியை (குடுமியை) களைந்தெறிந்த பெருமையும் அவருக்கு உரியது. முடி இல்லாதபோதிலும் கடைசிக்காலம் வரை முடியிழக்காத மன்னராக இசையுலகில் ஆட்சி புரிந்தார். பல தமிழ்ப் பாடடுகளுக்கு நிலை பெறக்கூடிய அருமையான வர்ண மெட்டுகளைக் கொடுத்ததோடு தாமே சில 'சொந்த' சாகித்தியங்களை இயற்றியுள்ளார். மரத்திலேயே இருந்து கனியும் பழம்போல, சில வருடங்களுக்கு முன் அலைந்து திரிந்த அவருடைய அகார பிர்க்கா சாரீரம்ஆச்சரியமான மெருகோடும் குழைவோடும் மாறி வரும் சமயத்தில் இறைவன் அவரை அழைத்துக்கொண்டது சங்கீத ரஸிகர்களின் துர்ப்பாக்கியம்.

—"வழிப்போக்கன்"

## கே. சி. நடராசா வருகிறார்

பம்பலப்பிட்டி, செவ்வாய்
சில காலத்திற்கு முன்னர் இலங்கையை விட்டுச்சென்ற பிரபல வழக்கறிஞர் திரு. கே. சி. நடராசா லண்டனிலிருந்து இன்னும் இரு வாரங்களில் இலங்கை வந்து சேருவாரெனத் தெரியவருகின்றது.

## மன்னாரில் மேதின விழா

மன்னார், செவ்வாய்
மன்னார்ப்பகுதிக் கத்தோலிக்க மக்கள் மேதினத்தை தொழிலாளர்களின் தினமாக சிறப்பாகக் கொண்டாடினர். அன்று மாலை கத்தோலிக்கத் தொழிலாளர்களின் பாதுகாவலரான அர்ச் சூசையப்பரின் திருச்சுரூவம், அர்ச் செபஸ்தியார் ஆலயத்திலிருந்து தொழிலாளர்களால் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

திவ்விய பூசைப்பலியின் பின்பு சவேரியார் கல்லூரி மண்டபத்தில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. திரு. எஸ். செல்வராஜா, திரு. பி. தங்கராஜா, இளைஞர்மன்றத் தலைவர் திரு. எஸ். பெனடிக்ற் முதலியோர்கள் சொற்பொழிவாற்றினர். கல்லூரி மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. மழை பெய்த போதிலும் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர்.

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், புதன்
வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் பின்வரும் தேவஸதானங்களில் பிரசங்கங்கள் நிகழ்த்தப்படும். வண்ணை வைத்தீஸவரன் தேவஸதானம்: ஸ்ரீமத். வி. எஸ். எஸ். மணி பாகவதர் "சம்பூர்ண மகாபாரதத் தொடர்".

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரியம்பாள் தேவஸதானம்: திரு. வ. கந்தையா வித்வான் "சக்திவழிபாடு."

நல்லூர் கிழக்கு ஸ்ரீ முத்த விநாயகராலயத்தில்: திரு. க. சுப்பிரமணியம் "மனுநீதிகண்ட சோழன்."

## வள்ளுவர் விழா

சாவகச்சேரி, செவ்வாய்
தென்மராட்சி இளந்தமிழர் மன்ற வகதடிக் கிளையின் கூட்டம் நேற்று மாலை ஆ. கந்தையாவின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஜூன் மாத நடுப்பகுதியில் திருவள்ளுவர் விழாவை சிறந்த முறையில் நடாத்துவதென்றும் அதையொட்டி பேச்சு, கட்டுரைப்போட்டிகள் நடாத்துவதென்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பேச்சுப்போட்டி

பருத்தித்துறை, செவ்வாய்
வடஇலங்கைத் தமிழாசிரியர்சங்கக் கல்விக்குழு இவ்வாண்டுக்கான மாணவர் பேச்சுத் திறன் ஆய்வுப்போட்டிகளை ஜூன் மாதம் 12-ம் திகதி நடாத்தவிருப்பதாகப் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளது.

இந்த இறுதிப் போட்டிக்கான தேர்வுப்போட்டிகளை வட்டாரங்கள் தோறும் கிளைச் சங்கங்கள் இம்மாதம் 20-ந் திகதி தொடக்கம் 26-ந் திகதி வரை நடாத்தி 1-ம், 2-ம் இடங்களைப் பெறுபவர்களின் பெயர்களை அனுப்பிவைக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

## விலைவாசிகளும் மந்திரிசபையும்

பம்பலப்பிட்டி, செவ்.
மந்திரிசபையின் உப-சபை கிழமைதோறும் கூடி பொருள்களின் விலைகள் பற்றியும் பொருள்களின் விநியோகம் பற்றியும் ஆராயும். இதுவிஷயமாக வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸ நேற்று கூடிய உப-சபைக் கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சந்தைகளில் பொருள்களின் விலைவிபரங்கள் பற்றியும் விலை ஏற்றம் விலை இறக்கம் பற்றியும் மந்திரிசபையின் உப-சபை தொடர்பு கொள்ளவேண்டும் என்றுவ உப-சபை கூடிய போது ஆராயப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## புதிய நியமனம்

பருத்தித்துறை செவ்.
கட்டைவேலி மெதடிஸத் தமிழ்க்கலவன் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. ஆ. த. சுப்பிரமணியம் ஆசிரியர்சேவையினின்றும் இளைப்பாறியதை முன்னிட்டு அவரது இடத்திற்கு தலைமையாசிரியராக திரு. ஏ. கணபதிப்பிள்ளை நியமனம்செய்யப்பட்டுள்ளார்.

## கந்தபுராண படனம்

யாழ்ப்பாணம், புதன்
மறவன்புலோ வள்ளக்குளம் வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் இம்மாதம் 6-ம் திகதி மணவாளக்கோல அபிஷேகமும், அதையடுத்து கந்தபுராணப் படிப்பும் ஆரம்பமாகி மூன்று மாத காலத்திற்கு தொடர்ந்து நடைபெறும்.

## இலவு காத்த . . :

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன, ஆனால் 40பேர்களையே டாக்டர்கள் சோதித்தனராம். இதனால் அதிகாலை தொடக்கம் ஆஸபத்திரி வாயிலில் வந்து மூற்றுகையிட்ட கர்ப்பிணிகள் சகி இலவுகாத்த கிளியின் நிலை தான்.

யாழ்ப்பாணம் ஆஸபத்திரியில் கண்காணிகளும பணியாட்களும், தாதிமார்களுமே நோயாளர்களிடம் அட்டகாசம் செய்வதாக பல முறை எமக்குப் புகார் கூறப்பட்டது. கால்கடுக்க நிற்கும் கர்ப்பிணிகளிடம் கூட இரக்கமற்ற முறையிலேயே நடந்து கொள்கிறார்கள்.

சிவப்பு நாடா மூலம் கர்ப்பிணிகளை கஷ்டத்திற்கும் துன்பத்திற்கும்ஆளாக்கும் நிலைமை மாற வேண்டும் என்று பல கர்ப்பிணிகள் கருதுகின்றனர். உதாரணமாக செவ்வாய்க்கிழமைகளில் ஆஸபத்திரிக்கு வந்த கர்ப்பிணிகள் அன்று டாக்டர்களால் பார்வையிடாவிட்டால் அடுத்து வரும் செவ்வாய்க்கிழமை மட்டும் காத்திருக்க வேண்டும். ஏனென்றால் அன்றுதான் அவர்களை முதலில் பார்வையிட்ட டாக்டர் நோயாளியைப் பார்வையிட முடியும், அதற்கிடையில் அவர்கள் நிலைமை என்ன ஆவது என்று இன்று காலை தனது மனைவியை யாழ்ப்பாணம் ஆஸபத்திரிக்கு எடுத்துச் சென்று அங்கே டிக்கட் பெற்றும் டாக்டரால் பார்வையிடப்படாத பரிதாபகரமான நிலையிலுள்ள ஒரு கணவன் கேட்டார்.

ஆஸபத்திரி அதிகாரிகளிடம் விசாரித்தபோது டாக்டர்கள் பற்றாக்குறையினாலேயே கர்ப்பிணிகளை ஒரு வாரத்தில் இருநாட்களிலை மட்டும் பரிசோதனை செய்வதாகத் தெரிவித்தனர். இனிமேல் தினமும் 6 மணிக்கு ஆஸபத்திரி திறக்கப்படும் எனவும் அவர்கள தெரிவித்தனர்.

## ஏல விற்பனை

இத்தால் தெரிவிப்பது கைதடி வல்லியா வளவில் அடைவுபிடிக்கும் பொன்னம்பலம் விஸ்வநாதனிடம் 1962ம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி தொடக்கம் 1964ம் ஆண்டு சித்திரை மாதம் 30ம் திகதி வரைக்கும் மீட்கப்படாத அடைவுபொருள்களையும் கூடுதலாகப் பணம்பெற்றுப் பெறுமதியில்லாதிருக்கும் அடைவுப் பொருள்களையும் வெந்தீஸில் விற்கப்படும். மீட்பவர்கள் 30-5-65க்குள் மீட்டுக் கொள்ளவும்.

இப்படிக்கு,
155 பொ. விஸ்வநாதன்

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸதாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி 38-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org